# ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு

## (D.El.Ed.)

### பாடப்பிரிவு 503

## தொடக்க நிலையில் மொழிகளைக் கற்றல்

***தொகுதி 2***

***மொழி கற்றலின் தொடர்புடைய திறன்கள்***

**தேசிய திறந்த நிலைப் பள்ளி நிறுவனம்**

(MHRD கீழ் செயல்படும் தன்னாட்சி நிறுவனம், இந்திய அரசு)

A 24-25, நிறுவனத்தின் அமைவிடம், கிளை - 62, நொய்டா 201309. (உ.பி.)

**www.nios.ac.in**

## தலைவரின் செய்தி

*அன்பார்ந்த மாணவர்களுக்கு,*

*தேசிய திறந்த வெளிப் பள்ளியானது மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி நிறுவனமாகும். இந்நிறுவனமானது தற்பொழுது உயர்நிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வியில் ஏறத்தாழ 2.02 மில்லியனுக்கும் மேற்பட்ட கற்போரைக் கொண்ட உலகின் மிகப்பெரிய திறந்த வெளிக் கல்வி நிறுவனமாகும். தேசிய அளவிலும் உலக அளவிலும் பரவலான அமைப்பைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கல்விப் பணிக்காகவும் தொழிற் பயிற்சிக்காகவும் 15 மண்டல மையங்களையும் 2 துணை மையங்களையும் மற்றும் 5000 கல்வி மையங்களையும் கொண்டுள்ளது. இந்நிறுவனம் கற்போர் மையத் தரமான கல்வியையும், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் திறந்த வெளி மற்றும் தொலைநிலைக் கல்வி மூலம் வழங்கி வருகிறது. இக்கல்வி முறையானது முறையாக வடிவமைக்கப்பட்ட புத்தகங்களின் உதவியுடன் நேரடி கற்பித்தல் வகுப்புகள் நடத்துதல் மற்றும் கல்வித் தொழில் நுட்ப வசதிகளான ஒலி/ஒளிப் பேழைகள், வானொலி ஒலிபரப்பு மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்பு போன்றவற்றின் துணையோடு வழங்கப்பட்டு வருகிறது.*

*தேசிய திறந்த வெளிப் பள்ளியானது ஆசிரியர்பயிற்சி பெறாத தொடக்கக்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்க அனுமதி பெற்ற அமைப்பாகும். இப்பயிற்சிக் கட்டகமானது, இந்நிறுவனம் இதே துறையில் பணியாற்றும் பிற அமைப்புகளுடன் ஒன்றிணைந்து தொடக்கக் கல்வியியல் பட்டயப் பயிற்சிக்காக உருவாக்கப்பட்டதாகும். அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விச் சட்டம் 2009ன்படி நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் பணிபுரியும் பயிற்சிபெறாத ஆசிரியர்களுக்காக இக்கட்டகம் உருவாக்கப்பட்டதாகும். புதுமையான மற்றும் சவாலான இரண்டாண்டு தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயப் பயிற்சிக்கு பணியிடைப் பயிற்சியாக திறந்த வெளிக் கல்வி நிறுவனம் வழங்கி வருகிறது.*

*தேசிய திறந்தவெளி பள்ளி வழங்கும் இப்பயிற்சிக்கு உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். உங்கள் மாநிலத்தில் உள்ள குழந்தைகளுக்கு தொடக்கக் கல்வி வழங்குவதில் உங்களின் பங்களிப்பை நான் பாராட்டுகிறேன். அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விச் சட்டம் 2009ன்படி அனைத்து ஆசிரியர்களும் ஆசிரியப் பயிற்சி பெறுவது கட்டாயமாகும். பள்ளியில் கற்பிக்கும் அனுபவம் மூலம் ஓர்*

ஆசிரியர்களுக்குத் தேவையான அடிப்படைத் திறன்களை நீங்கள் ஏற்கனவே பெற்றிருப்பீர்கள் என அறிந்திருந்தாலும் சட்டரீதியாக, இப்பட்டயப் பயிற்சி பெறுவது அவசியமாகும். கற்பித்தல் அனுபவத்தின் மூலம் நீங்கள் பெற்ற திறன்கள் இப்பயிற்சி மேற்கொள்ள நிச்சயமாக உங்களுக்கு உதவும்.

இந்தத் தொலைநிலை தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி தங்களது அன்றாட கற்பித்தல் பணிக்கு இடையூறு செய்யாமல், பல கற்பித்தல் திறன்களை வளர்க்க பல்வேறு வாய்ப்புகளை வழங்கும்.

தானே கற்றல் முறையில் உருவாக்கப்பட்ட இப்பயிற்சி நூலானது உங்களை ஒரு தகுதியான ஆசிரியராக உருவாக்குவதற்கும் மேலாக உங்களை ஒரு நல் ஆசிரியராக உருவாக்கும் விதமாக அமைந்துள்ளது.

“தாங்கள் நல்லாசிரியராக எனது வாழ்த்துக்கள்”

**சேர்மன், NIOS**

# தொகுதி *2*

# மொழி கற்றலின் தொடர்புடைய திறன்கள்

**அலகுகள்**


அலகு *4* கேட்டல் மற்றும் பேசுதல்

அலகு *5* படித்தல்

அலகு *6* மொழியைக் கற்றலும் கற்பித்தலும்

# தொகுதி அறிமுகம்

இந்த இயலானது தங்களுக்கு மொழியின் பல்வேறு நோக்கங்களை கற்பிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த இயலைக் கற்றபின் தங்களிடம் உள்ள மொழி ஆர்வம் மேம்படுவதுடன் நீங்கள் ஓர் ஆர்வமிக்க கற்போராக மாறுவீர்கள் என்று நினைக்கிறேன். மேலும் மொழிப்பாடத்தை மகிழ்ச்சிகரமாகவும், திறமையாகவும் கற்பிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

**இயல் 1 :** மொழியின் இயல்பு, மொழியின் பயன்பாடு மொழியின் சமூக மற்றும் உளவியல் பண்புகளைப் பற்றி விவரிக்கிறது.

**இயல் 2 :** இந்தியாவின் பன்மொழிப் பண்பினையும், பல்வேறு மொழிகள் கொண்ட ஒரு நாடு ஒற்றுமையான நாடாக விளங்க மொழி ஒரு வளமாக எங்ஙனம் விளங்குகிறது என்பதை விவரிக்கிறது.

**இயல் 3 :** மொழியைக் கற்றுக் கொள்ளும் முறை மற்றும் மொழியைக் கற்பிக்கும் முறைகளைக் குறித்து விவரிக்கிறது.

குழந்தைகள் மொழியைக் கற்றுக் கொள்ளும் வண்ணம் எண்ணிலடங்கா திறன்களுடன் பிறக்கின்றனர். குழந்தைகளுக்கு *3* அல்லது *4* வயதாகும் போது மொழியைத் திறம்பட பயன்படுத்தத் தொடங்குகின்றனர். அவர்கள் மொழியின் பயன்பாட்டை நன்றாக உள்வாங்கிக் கொண்டதை நமக்கு உணர்த்தும் வண்ணம், குறுகிய காலத்திற்குள் புதிய சொற்களைப் புரிந்து கொள்ளவும் உருவாக்கவும் செய்கிறார்கள். குழந்தைகள் சிறு வயதிலேயே பல்வேறு சிக்கலான இலக்கண அமைப்பு கொண்ட சொற்றொடர்களைக் கூட எளிதாகப் புரிந்து கொள்வது வியப்பூட்டுவதாக உள்ளது. குழந்தைகள் உலகளாவிய இலக்கண அறிவைப் பெற்றிருக்கிறார்களா என்பதை நாம் விரிவாகக் காண்போம். மொழிக் கற்பிப்பதில் இலக்கணத்தின் பங்கு என்ன என்பதைப் பற்றியும், இலக்கண மொழி மாற்ற முறை, நேரடி மொழிக் கற்பித்தல் முறை, ஒலி வழி மொழிக் கற்பித்தல் முறை, தகவல் பரிமாற்ற முறை போன்ற முறைகளிலுள்ள நிறைகள் மற்றும் குறைகள் குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளதை நாம் கற்றுக் கொள்வோம்.

**இயல் 4 :** ஒலி வழி மொழிக் கற்பித்தல் முறை பற்றி விரிவாக எடுத்துரைக்கிறது.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| அலகு | *4* | கேட்டல் மற்றும் பேசுதல் | *1* |
| அலகு | *5* | படித்தல் | *27* |
| அலகு | *6* | மொழியைக் கற்றலும் கற்பித்தலும் | *47* |

# அலகு 4

# கேட்டல் மற்றும் பேசுதல்

## அமைப்பு


4.0. அறிமுகம்

4.1. கற்றலின் நோக்கங்கள்

4.2. கேட்டலும் பேசுதலும்

4.2.1. கேட்டல் என்பதன் பொருள்

4.2.2. பேசுதல் என்பதன் பொருள்

4.3. வகுப்பறையில் உரையாடலின் தேவை

4.4. வகுப்பறையில் கேட்டல் பேசுதல் திறன்களை வளாக்க உதவும் வாய்ப்புகள்

4.4.1. மழலையர் பாடல் / செய்யுள் / கேட்டலுக்கு ஏற்ற பாடல்கள்

4.4.2. படங்கள்

4.4.3. கதை கூறல்

4.4.4. நாடகம் / கலையரங்கம் / நடித்தல் மூலமாக மொழித்திறனை வளர்த்தல்

4.4.5. பாட இணைச் செயல்கள்

4.5. சரியாக சரளமாகப் பேசுதல்

4.6. தொகுப்புரை

4.7. மேற்கோள் நூல்கள்

4.8. பயிற்சிகள்

குறிப்புகள்

## 4.0. அறிமுகம்

குழந்தைகள் தங்கள் வீட்டுச் சுற்றுச்சூழலில் பேசப்படும் மொழிகளை இலகுவாகக் கற்றுக்கொள்கிறார்கள் என்பதனை முந்தைய அலகில் அறிந்தோம். ஏனெனில், பல்வேறு மொழிகளைக் கேட்கவும், பேசவும் போதிய வாய்ப்புகள் கிடைக்கப்பெறுகின்றனர். மேலும், இதுபோல் பள்ளிகளில் கற்க வேண்டிய மொழிகளைக் கேட்பதற்கும் பேசுவதற்கும் தேவையான வாய்ப்புகள் கொடுக்கப்பட்டால் கற்றல் சாத்தியமாகும் என்பதைத் தெரிந்து கொண்டோம்.

இந்த அலகில் கேட்டல் மற்றும் பேசுதல் திறன்களைப் பற்றிப் பார்ப்போம். கேட்டல் மற்றும் பேசுதல் என்றால் என்ன? அத்திறன்கள் மொழியைக் கற்றலுக்கு எவ்விதம் துணை புரிகின்றன? மொழி கற்பிக்கும் ஆசிரியரின் முன்னோக்கு பார்வையினைப்பற்றியும் அறியலாம்.

## 4.1. கற்றலின் நோக்கங்கள்

இந்த அலகினை வாசித்த பிறகு

- கேட்டல், பேசுதல் திறன்களின் பொருள் அறிதல் வேண்டும்
- ஒரு மொழியின் கற்றல், கற்பித்தல் செயல்முறையில் கேட்டல், பேசுதல் திறன்களின் பங்கினைத் தெரிந்து கொள்ள வேண்டும்.
- இத்திறன்களைக் கற்பிக்கும் ஆசிரியர் பல்வேறு கடமைகளையும், அவரது முக்கியமான பங்கினையும் உணர்தல் வேண்டும்.
- பேசும்போது தவறின்றிப் பேசுதல் மற்றும் சரளமாகத் தடையின்றி பேசுதலின் முக்கியதுவத்தைப் புரிதல் வேண்டும்.

## 4.2. கேட்டல் மற்றும் பேசுதல்

குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் முதல் 23 மாதங்களில் கேட்டல் மற்றும் பேசுதல் திறன்களுக்கான பயிற்சி கொடுக்கப்படுகிறது. பல வகையான பயிற்சிகள் தரப்பட்டாலும் அவற்றுள் முதன்மையாக விளங்குவது ஆசிரியரின் வாசிப்புப் பயிற்சியே ஆகும். செய்யுள், பாடல், எண்கள், எழுத்துகள் போன்றவற்றை ஆசிரியர் சொல்லச் சொல்ல, அதனைப் பின்பற்றி குழந்தைகள் கூறுவார்கள். குழந்தைகள் தாங்கள் பேசுவது புரியாவிடினும் பாடத்தை மனனம் செய்ய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், அந்த பாடத்தை முழுமையாக மனனம் செய்யும் வரை மீண்டும் மீண்டும் சொல்லுமாறு நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

குறிப்புகள்

மீண்டும், மீண்டும் ஒரே மாதிரியான ஒலிகளைக் கேட்பதாலும், பேசுவதாலும், மனப்பாடம் செய்வது எளிதாகும் என ஆசிரியர்கள் நம்புகிறார்கள். குழந்தைகள், கேட்டறியாத புதிய வார்த்தையையோ, வாக்கியத்தையையோ கற்றுக்கொள்ள முடியாது என ஆசிரியர்கள் நம்புகிறார்கள். இதனால் ஒரு குழந்தை முதலில் கேட்டு, பின்பு தான் பேசுகிறது என்பது உணர்த்தப்படுகிறது.

கேட்டலும், பேசுதலும் இணையான செயல்களாகும் . நாம் ஏதாவது பேசுகிறோம் என்றால், முதலில் நாமே அதைக் கேட்கிறோம். சில சமயங்களில், நாம் கேட்க மட்டுமே செய்கிறோம். உதாரணமாக வானொலி மற்றும் தொலைக்காட்சி வாயிலாக செய்திகளைக் கேட்கிறோம். ஒலிப்பதிவு பெட்டியின் மூலமாக பேசுவதை ஒலிப்பதிவு செய்து வார்த்தைக்கு வாரத்தை திருப்பிச்சொல்ல உதவுவது போல் உள்ளது. கேட்டல், பேசுதல் ஆகிய திறன்களின் மற்றொரு முக்கியமான இயல்பானது புரிந்து கொள்ளுதல் ஆகும். புரிந்து கொள்ளாமல் நாம் ஓர் உரையாடலை நிகழ்த்த முடியாது. இக்கருத்து, தொலைபேசி வாயிலாக நாம் பேசும் நிகழ்வைப் பற்றிச் சிந்தித்தால் தெளிவாகும். தொலைபேசியில் பேசும்போது, நாம் மறுமுனையில் உள்ளவர் பேசுவதை முதலில் கேட்கிறோம். அதைப்புரிந்து கொண்டு அதற்கேற்றாற்போல் பதில் தருகிறோம். இந்நிலையில் புரிந்து கொள்ளாமல் கலந்துரையாடலை நிகழ்த்த முடியாது. எனவே ஒரு மொழியைக் கற்கும்போது கேட்டல், பேசுதல் திறன்களைப் பிரித்துப்பார்க்க இயலாது. அத்திறன்கள் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடாபு உடையவை. மேலும் இவற்றோடு சிந்தித்தலும் புரிந்து கொள்ளுதலும் இணைந்திருக்கின்றன.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 1**

1. கேட்டல், பேசுதல் திறன்

   (அ) கேட்டல் (ஆ) பேசுதல் (இ) புரிதல் (ஈ) தகவல்பெறுதல்

2. கேட்டல் - பேசுதல் செயல்முறையிலிருந்து தகவல் பெறும் செயல்முறை எவ்விதம் வேறுபடுகிறது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. பள்ளிகளில் தொடக்க நிலை வகுப்புகளில் குழந்தைகளுக்கு பேசுதலுக்கும் கேட்டலுக்கும் எவ்விதமான வாய்ப்புகள் தரப்படுகின்றன? இந்த வாய்ப்புகள் போதுமானவையா் உங்கள் கருத்தைக் கூறுக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. உங்கள் நண்பர் இன்றைய காலைச் செய்திகளை வானொலி மூலம் கேட்க இயலாத நிலையில் உள்ளார். எனவே அவர் உங்களை அச்செய்திகளைக் கேட்டுச் சொல்லுமாறு கூறுகிறார். நீங்கள் அவரிடம் என்ன சொல்வீகள்? மேலே கூறப்பட்ட செயல்பாட்டினைச் செய்வதற்கு என்ன தேவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 4.2.1. கேட்டல் என்பதன் பொருள்

சுற்றுப்புறச்சூழலில் பலவித ஒலிகளை நாம் கேட்கிறோம். அவை மனிதர்களால், விலங்குகளால், இயந்திரங்களால் ஏற்படுத்தப்படுபவை ஆகும். இவ்வித ஒலிகள் அனைத்திற்கும் நாம் முக்கியத்துவம் தருவதில்லை. எடுத்துக்காட்டாக இயங்கும் இயந்திரத்தால் ஏற்படும் ஓசை (நாம் விரும்பாத ஒலி) அல்லது கீச்சிடும் பறவை ஒலி (நாம் விரும்பும் ஒலி) எந்தவொரு பொருளும் தருவதில்லை.

கேட்டல் என்ற செயல்பாட்டில், கேட்பதன் பொருளை உணர்தலே முக்கியமாகும். உரையாடலின் போது கேட்பவர் உரையாடலின் முழுமையான கருத்தினை உடனே புரிந்து கொள்ள வேண்டும். இவ்விதமாக புரிந்து கேட்டல் என்பது இருவழிகளில் நடைபெறுகிறது. அவற்றை விரிவாகப் பார்ப்போம்.

முதலில் உரையாடலில் உள்ள வார்த்தைகள் மூலமாகத்தான் கேட்பவர் பொருளைப் புரிந்து கொள்வர் வாரத்தைகள், சொற்றொடர்கள், வாக்கியங்கள் போன்றவற்றைக் கொண்டே வாக்கியத்தின் உட்பொருளை அறிய முடியும். கேட்பவர் வார்த்தைகளின் பொருளையும், வாக்கிய அமைப்பின் முறைகளைப் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகிறது.

எடுத்துக்காட்டு உங்கள் நண்பர் விருந்திற்கு உங்களை அழைக்கிறார். அவர் வீட்டுக்கு வரும் வழியையும் கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் எப்படிச் சொல்வார்? மத்தியப்பேருந்து நிலையத்திலிருந்து இடது புறமாகத்

திரும்பி, நேராக வந்து பின் மின்சார வாரியத்திற்று எதிரில் உள்ள சந்தில் கடைசி வீடு தான் என்னுடையது என்கிறார்.



நீங்கள் அவர் வீட்டிற்குச் செல்லும் முன் பலமுறை அவர் கூறிய வழிமுறையை மனதிற்குள் சொல்லிப் பார்த்துக் கொள்வீர்கள். அவர் கூறிய வழிகாட்டுதலின்படி நடப்பதில் தான் உங்களின் முழுக்கவனம் இருக்கும். இதில் மத்தியபேருந்து நிலையம், இடது புறம் மின்சாரவாரிய அலுவலகம், கடைசி வீடு என எல்லாத் தகவல்களும் மனதில் பதிந்து ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி அறிந்து கொள்வீர்கள்.

இவ்விதமாக இக்கூற்றினைப் புரிந்து கொள்ள, கேட்பவர்க்கு நல்ல சொல்வளம் வேண்டும். வாக்கிய அமைப்பு பற்றிய தெளிவு வேண்டும். தொடாச்சியான பயிற்சியினால் கீழ்வரும் திறன்களைப் பெறலாம்.

- வாக்கியத்தை மிகக் கவனமாக கேட்டல்
- முக்கிய வார்த்தைகளை அறிதல்
- குறிப்பு வார்த்தைகளுக்கும் வாக்கியத்திற்கும் உள்ள தொடர்பினை புரிதல்
- பேசுபவர் சில வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்து உச்சரிப்பதையும் போதிய இடை நிறுத்தத்தோடு பேசுபவரின் அவசியத்தை உணர்தல்.

ஒரு வாக்கியத்தின் பொருளை நாம் அறிய, நமது முந்தைய அறிவும் உதவுகிறது. புரிந்துகொள்ளும் செயல்முறைகள் இரண்டுவித நிகழ்வுகள் ஏற்படுகின்றன. பொருளைப் புரிந்து கொள்ள வார்த்தைகளிலிருந்து பொருள் விளங்கிக் கொள்வது போல், முந்தைய அறிவின் பயனாக பொருளிலிருந்து வார்த்தைகளைத் தெரிந்து கொள்கிறோம். உரையாடல்கள், அனுபவங்கள், வாசிப்பு போன்றவற்றால் முந்தைய அறிவு பெறப்படுகிறது.

உதாரணமாக செய்தியில் நேற்று இரவு மெக்சிகோவில் நில நடுக்கம் என்று கேட்கிறோம். அது தொடர்பாக பல வினாக்கள் மனதில் எழும்.

- நிலநடுக்கம் எவ்வளவு தீவிரமாக இருந்தது?
- இதில் எத்தனை பேர் உயிரிழந்தனர்?
- இதில் எத்தனை பேர் காயமுற்றனர்?
- இந்நிலநடுக்கத்தின் விபரீத விளைவுகள் யாவை?
- எத்தகை மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது?

இத்தகைய கேள்விகள் மேலே சொன்ன செய்தியை முழுமையாக புரிந்து கொள்ள உதவுகின்றன. இவ்விதமாக குறைவான தகவல் இருப்பினும், முழுமையான புரிதல் ஏற்படுகிறது. இதற்கு நமது முந்தைய அறிவோ, அனுபவமோ கை கொடுக்கிறது. இச்செய்தியின் அடிப்படைத் தகவல்கள் எங்கே, எப்போது நில நடுக்கம் ஏற்பட்டது என்பதை மட்டுமே தருகிறது. ஆனால் நாம் ஏற்கனவே அறிந்த, கேள்விப்பட்ட அல்லது படித்த அறிவினைக் கொண்டு பலவித வினாக்கள் எழுப்பி அச்செய்தியின் முழுப் பொருளையும் அறிந்து கொள்கிறோம். இத்தகைய செயல்முறையால் அச்செய்தியை புரிந்து கொள்ள இயலாத ஒருவர் அதன் பொருளை முழுமையாக அறிய இயலாது. மேலும் நில நடுக்கம் பற்றி ஏதும் தெரியாதிருப்பின் இச்செய்தி முழுமை பெறாது. இதற்கான பயிற்சியினால் கீழ்வரும் திறன்களைப் பெறலாம்.

உரையாடலின் முக்கிய வார்த்தைகளின் பொருளை உணர்த்தி

- சூழல் பற்றிய கேள்விகள் எழுப்புதல்
- காரணம் மற்றும் விளைவிற்கும் இடையே உள்ள தொடர்பினை மதிப்பிடுதல்
- ஒரு சூழலில் சொல்லப்படாத தகவல்களையும் அறிதல்.

கேட்டல் திறன் நடைபெறும் போதே இந்த செயல்முறைகளும் இணையாகவே தொடர்ந்திடும். பேசப்படும் செய்தி பற்றி கேட்பவரின் அறிவு, தகவலின் வகை உண்மைத்தன்மை கேட்பதன் நோக்கம் ஆகியவற்றைச் சார்ந்தே இந்த செயல்முறை நடைபெறுகிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 2**

1. கவனித்தலின் போது எத்தனை வகையில் அர்த்தம் புரிந்து கொள்ளப்படுகிறது.

   (அ) ஒன்று (ஆ) இரண்டு

   (இ) மூன்று (ஈ) நான்கு

2. வார்த்தைகளைப் பயன்படுத்தி கலந்துரையாடும் போது அர்த்தத்தை எவ்வாறு உருவாக்கலாம்? எடுத்துக்காட்டுடன் விவரி.

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................


குறிப்புகள்

3. வாத்தைகளை அடிப்படையாகக் கொண்டு பெறப்படும் புரிதலுக்கும், முன்பே அறிவினால் பெறப்படும் புரிதலுக்கும் உள்ள வேறுபாடுகள் எவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. பல்மருத்துவரை பார்க்கப் போகிறேன் என்று ரவி கூறுகிறான். இவ்வாக்கியத்திலிருந்து எவ்விதமான வினாக்களை எழுப்பலாம்?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 4.2.2. பேசுதல் என்பதன் பொருள்

பேசுதல் என்பது வெறும் ஒலிகள், வார்த்தைகள், வாக்கியங்கள் ஆகியவற்றை உரைப்பது மட்டுமல்ல. தி ஆர்டிக்குலேட் மேமல் என்ற நூலில் ஜீன் அட்சின்சன் என்பவர் மனிதர்களின் மொழியில் புரிதல் பற்றி மிக விரிவாக கூறியுள்ளார். நாம் பேசும் முன், நாம் பேசுவதைக் கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் எவ்விதம் பேசவேண்டும் எனத் திட்டமிடுகிறோம். மேலும் யாரிடம், எதற்காக எதைப்பற்றி பேச வேண்டும் என்பதையும் தீர்மானிக்கிறோம். ஒரே கருத்தை நம் நண்பரிடமும், நம் தாத்தாவிடமும் கூற வேண்டிய நேரத்தில் நாம் பேசும் தோரணையும், தேர்ந்தெடுக்கும் வார்த்தைகளும் மாறுபடும்.

இரு சூழல்களிலும் நாம் என்ன பேச வேண்டும் என்பதை முதலில் திட்டமிடுகிறோம். எதைப் பேச வேண்டும் என்றும் எப்படி பேச வேண்டும் என்றும் தீர்மானிக்கிறோம்.

(எ.கா) நான் இன்று வீட்டிற்கு தாமதமாக வருவேன்
தாயார் மிகவும் கோபம் கொள்வார்
நான் வெளியில் தங்க வேண்டியிருக்கும்

இவ்வாக்கியங்களை ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தி அதன் பொருளை மிக இலகுவாகப் புரியச்செய்யலாம்.

பேசும்போது ஏற்ற இறக்கம், நிறுத்தம், ஓசை நயத்தோடு பேசுவதற்கு இன்றியமையாகிறது. பேச்சின் இடையே நிறுத்தம் ஏற்படுவதால் பொருள் மாறுபடுகிறது.

குறிப்புகள்

(எ.கா.) கமலா (நிறுத்தம்) அத்தை வீட்டுக்குச் சென்றாள்.

கமலா அத்தை (நிறுத்தம்) வீட்டுக்குச் சென்றாள்

இதேபோல், பேசும் போது ஒரு வார்த்தைக்கு நாம் கொடுக்கும் அழுத்தமோ அல்லது உச்சரிப்பு வேறுபாடோ, அவ்வாக்கியத்தின் பொருளை மாறுபடச் செய்கிறது.

"பள்ளிக்குச் செல்கிறாயா"

இந்த வாக்கியத்தை ஏற்ற தொனியோடு கூறும்போது கேள்வியாகவும் இறக்கத்தொனியோடு கூறும்போது வியப்பு வாக்கியமாகவும் ஏற்ற இறக்கத்தோடு கூறும் போது கேலித் தொனியோடு ஒலிக்கும். சைகைகள் மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் போன்ற சொற்களற்ற சமிக்கைகள் பேசுதல் திறனை மேம்படுத்தும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 3**

1. தமிழ் மொழியின் வாக்கிய அமைப்பு எது?

   அ) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்

   ஆ) பயனிலை, எழுவாய், செயப்படுபொருள்

   இ) செயப்படுபொருள், பயனிலை, எழுவாய்

   ஈ) எழுவாய், செய்யப்படு பொருள், பயனிலை

2. 3, 4 வயதுக் குழந்தைகள் பேசக்கூடிய 10 வாக்கியங்களை எழுதுக.

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

3. தமிழ் தாய்மொழி அல்லாதவர் பேசும் 5 வாக்கியங்களைத் தொகுத்து எழுதுக. அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்பாடுகளை ஆராய்க.

   ........................................................................................................

   ........................................................................................................

   ........................................................................................................

## 4.3. வகுப்பறையில் உரையாடலின் தேவை

ஒரு மொழியைக் கற்றுக் கொள்ளும்போது கேட்டலும், பேசுதலும் முதற்படிகளாகத் திகழ்கின்றன. கேட்டலைத் தொடர்ந்து கேட்டலின் விளைவாலும் உருவாகும் திறன் பேசுதல் ஆகும். இவை இரண்டும் உரையாடலின் போது ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன.

பொதுவாக மொழி வகுப்புகளில் ஆசிரியர் பாடம் நடத்த மாணவர்கள் அமைதியாகக் கேட்பார்கள் அல்லது ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்வார்கள். இவ்விதமாக கேள்விகளுக்குப் பதில் கூற மட்டுமே பேசும் திறனை பயன்படுத்தினர். இவை உரையாடல்களாகக் கருதப்பட மாட்டா. ஏனெனில் உரையாடல் நிகழும்போது ஆசிரியரின் அழுத்தம் இல்லாது தங்கள் கருத்துகளை துணிவாக வெளிப்படுத்த வேண்டும். ஆனால் இத்தகைய சூழலை ஆசிரியர்கள் விரும்புவதில்லை. வகுப்பறையில் ஒழுக்க நெறி தடைப்படுவதாக ஆசிரியர்கள் நினைக்கிறார்கள். எனவே கற்றலிலும் தடை ஏற்படுகிறது. குழந்தைகள் கற்கும்போது உரையாடலின் முக்கியத்து வத்தை உணராத சில ஆசிரியர்களின் அணுகுமுறையால் தான் ஏற்படுகிறது.

தொடக்க நிலையில் குழந்தைகள் வீட்டில் பேசப்படும் மொழியை எளிதாக பேசவும், பொருள் உணர்ந்து கொள்ளவும் இயலுகிறது. பள்ளியில் சேரும் வரை அம்மொழியை பயன்படுத்துகிறார்கள். ஆனால் பள்ளியில் சேர்ந்ததும் புதிய மொழி கற்க வேண்டியுள்ளது. பள்ளியில் மொழியைக் கற்கும் போது பிரச்சனை ஏற்படுகிறது. இவ்விதமாக இரண்டு மொழிகளைக் கற்க வேண்டிய நிலையில், அவற்றின் இடையே உள்ள இடைவெளி குறைவதற்கும் இலகுவாகக் கற்பதற்கும் உரையாடல் நிகழ்த்த வாய்ப்புகள் அளிக்க வேண்டும். இத்தகைய வாய்ப்புகளை பயன்படுத்தும் போது குழந்தைகள் தங்கள் சூழலை மதிக்கக் கற்றுக் கொண்டு தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதமாக உற்சாகப்படுத்துவது, குழந்தைகளை ஒரு புதிய மொழியைக் கற்கத் தூண்டுகிறது.

இலக்கில்லாத உரையாடல்களைக் குழந்தைகள் நிகழ்த்துவதில்லை. இரு குழந்தைகளுக்கிடையே இயற்கையாகவே நடக்கும் உரையாடலை உற்று நோக்குக.

## படத்தைப் பார்த்து குழந்தைகளை உரையாடச் செய்க.



குறிப்புகள்

உரையாடலின் பயன்களைப் பெறுவதற்கு நாம் முதலில் குழந்தைகள் பேசுவதைக் கேட்க வேண்டும். ஆனால் நாம் அவ்விதம் செய்வதில்லை. சில நேரங்களில், குழந்தைகள் மிக அழகாக ஒப்புமைப்படுத்தியோ, கற்பனை நயத்தோடோ வருபவற்றை முன் கூட்டியே, கூறிவிடுகிறார்கள். அதனால் உரையாடல் மூலமாக குழந்தைகள் கற்கும் வாய்ப்புகள் அதிகம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 4**

1. உரையாடலின் போது கீழ்க்கண்ட எந்த இரண்டு செயல்முறை ஒரே நேரத்தில் நிகழும்?

   (அ) கேட்டலும், பார்த்தலும் (ஆ) வாசித்தலும், கேட்டலும்

   (இ) கேட்டலும், பேசுதலும் (ஈ) கேட்டலும், சிரித்தலும்

2. வகுப்பில் குழந்தைகளின் உரையாடல் பற்றிய ஆசிரியர்களின் கருத்து என்ன?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

3. குழந்தைகள் அதிகமாக உரையாடல்கள் நிகழ்த்திட வாய்ப்புகள் அளிப்பதில் ஆசிரியரின் பங்கு என்ன?

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

4. உங்கள் அண்டை அயலார் வீட்டுக் குழந்தைகள (3 முதல் 6 வயது வரை) பேசும் உரையாடல்களை நன்கு உற்று நோக்கிட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டவையில் எவை உரையாடல்களில் உள்ளன.

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

## 4.4. வகுப்பறையில் கேட்டல், பேசுதல் திறனை வளர்க்க உதவும் வாய்ப்புகள்



குறிப்புகள்

கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் திறக்கப்படுகின்றன. மழையின் காரணமாக ஆங்காங்கே தண்ணீர் குட்டைகளாகத் தேங்கி நின்றன. ஓர் ஆசிரியை வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பின் இருக்கையில் அமர்ந்திருந்த இரு குழந்தைகள் தங்களுக்குள் ஆர்வமாகப் பேசிக் கொண்டிருந்தனர். "என்ன விஷயம் என்னிடம் சொல்லக் கூடாதா எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள்? ஏதாவது சுவாரஸ்யமானது என்றால் உங்கள் வகுப்புத் தோழர்களும் தெரிந்து கொள்வார்கள் அல்லவா என்றார் ஆசிரியை.

அந்த இரு குழந்தைகளும், பயத்தில் ஒன்றும் பேசாது, மௌனமாகி விட்டனர். ஆனால் ஆசிரியை, "நீங்கள் பயப்பட வேண்டாம். எதைப்பற்றி பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று சொல்லலாம் அல்லவா" என்றார். அதில் ஒரு குழந்தை சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "நாங்கள் வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்தபோது தவளைகள் மிகுந்த ஒலி ஏற்படுத்துவதைக் கேட்டோம்" என்றது, அந்த ஆசிரியை, குழந்தையை உற்சாகம் ஊட்டும் வண்ணம் "ம்! அடுத்து என்னவாயிற்று?" என்று வினவினார். குழந்தைகள் குட்டையின் விளிம்பிலிருந்து தவளைகள் குதித்துக் கொண்டிருந்தன. அவை மிகப்பெரியவையாகவும், இருந்தன" என்றனர். ஆசிரியர்! அப்புறம் என்னவாயிற்று என்று கேட்டார். அப்புறம்.. நாங்கள் அவைகள் அருகே சென்றோம். அவைகள் குட்டைக்குள் மீண்டும் குதித்து விட்டன. குழந்தைகளுக்கு நம்பிக்கை வந்தது. அவர்கள் பேசியதற்கு இனி தண்டனையோ, திட்டோ கிடைக்காது என்று சமாதானம் அடைந்தார்கள்.

ஒரு குழந்தை ஆசிரியையிடம் "மழைக்குப் பின் தவளைகள் எங்கு செல்லுகின்றன? "என்று வினவியது. அந்த ஆசிரியை தான் நடத்தவிருந்த பாடத்தை ஒதுக்கிவிட்டு " எல்லோரும் தவளையைப் பார்த்திருக்கிறீர்களா் என வினவினார். அனைவருமே தவளையைப் பார்த்திருப்பதாகக் கூறினார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் தவளை பற்றி தாங்கள் அறிந்ததை பகிர்ந்திட வந்தார்கள். ஒரு குழந்தை "மழைக்காலத்தில் தவளைகள் ஏற்படுத்தும் ஒலியைப் பற்றிக் கூறியது. இன்னொரு குழந்தை" எங்கள் வீட்டுக்குப் பின் பக்கம் தோண்டும்போது தவளைகள் வெளியே வந்தன" என்றது. ஒரு குழந்தை தான் பூச்சிகளைத் தின்னும் தவளையைப் பார்த்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டது. வேறொரு குழந்தை தவளைகள் படியில் இருந்து குதிக்கும் எனக் கூறியது.

குறிப்புகள்

வகுப்பறைச் சூழலே மாறிவிட்டது. சில குழந்தைகள் தவளையைப் போல ஒலி எழுப்பினர். சிலர் தவளையைப் போல குதித்துக்குதித்து விளையாடினார்கள். குழந்தையின் உரையாடலை மிகவும் கவனமாகக் கேட்ட அந்த ஆசிரியை அவர்களது செயல்பாடுகளையும் உற்சாகமாகக் கவனித்தார். இடை இடையே வகுப்பறையின் கட்டுப்பாட்டை நெறிப்படுத்தினார்.

குழந்தைகளிடம் தவளைகளை நன்றாகக் கவனியுங்கள், மழைக்கு அவை எங்கே செல்லும் என்று யோசியுங்கள் என்றார் ஆசிரியை. இறுதியாக தவளைகள் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதச் சொன்னார். உரையாடலின் போது, தவளைகளின் வாழ்விடம், பழக்கவழக்கங்கள், நிறம் போன்றவற்றை தொடர்புபடுத்தி பல தகவல்களைக் கூறினார் ஆசிரியை. இவ்விதமாகக் குழந்தைகளோடு நன்கு பழகி, அவர்களைப் பேசுவதற்கு பல சந்தர்ப்பங்களைத் தரும் பட்சத்தில் கற்றல் எளிதாகும். குழந்தைகள் தங்கள் அனுபவங்களைப் பகிர்வதோடு தங்கள் உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளிப் படுத்துகிறார்கள். மற்ற பாடங்களைப் புரிந்து கொள்வது மிகவும் எளிதாகிறது. இதற்கான வாய்ப்புகளைத் தேடி அலைய வேண்டாம். பள்ளிச் சுற்றுப்புறச் சூழலோ அல்லது அதைச் சுற்றியுள்ள தோட்டம், பண்ணை, பாதாளச் சாக்கடை, சிறிய பாலம், பூக்கள், வண்ணத்துப்பூச்சி, சாலை, மண், பறவைக்கூடு எனப்பலவும் வாய்ப்புகள் ஏற்படுத்த உதவுகின்றன. இவற்றை உற்று நோக்குவதால் குழந்தைகள் அவற்றைப் பற்றி பேசுவது எளிதாகிறது.

இந்த ஆசிரியை குழந்தைகள் பேசுவதற்கு அதிக வாய்ப்புகளை அளித்தார். அவர்களைப் பேசிடும் வண்ணம் உற்சாகப்படுத்தினார். இவ்விதமாக அவர், அவர்களிடையே ஆர்வத்தை ஏற்படுத்தாவிடில், அந்த வகுப்பறையில் அத்தகைய உரையாடல் நடந்திருக்க வாய்ப்பில்லை. வகுப்பறையில் குழந்தைகளின் வாழ்க்கையையும், அனுபவங்களையும் இணைப்பதால் கற்றல் மிக எளிதாகவும், தன்னிச்சையாகவும் இயற்கை யாகவும் நடைபெறுகிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 5**

1. குழந்தைகளுக்கு உரையாடல் நிகழ்த்திட கொடுக்கப்படும் வாய்ப்புகளின் நன்மை யாது?

   (அ) தங்கள் அனுபவத்தையும், எண்ணங்களையும் வெளிப்படுத்த இயலும்.

   (ஆ) வார்த்தைகளை அறியலாம்

   (இ) இயல்புடைய சொற்களைத் தெரிந்து கொள்ளலாம்

   (ஈ) வாசிக்கக் கற்கலாம்.




2. ஆசிரியர் குழந்தைகள் பேசுவதற்கான வாய்ப்புகளை ஏன் தரவேண்டும்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

3. வகுப்பறையில் நீங்கள் கற்பித்தல் உரையாடலை எவ்விதமாக குழந்தைகளுக்குக் கொண்டு செல்வீர்கள்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

4. கற்பித்தலின் போது ஒரு வகுப்பறையின் சூழல் எப்படி இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பீர்கள்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

## 4.4.1. செய்யுளைக் கேட்டலும், பாடுதலும்

### மழலையர் பாடல்கள்

யானை வருது யானை வருது பார்க்க வாங்க
அசைந்து வருது அசைந்து வருது பார்க்க வாங்க
தும்பிக்கையை நீட்டி வருது பார்க்க வாங்க
தூணைப் போல காலிருக்கு பார்க்க வாங்க
முறத்தைப போன்ற காதிருக்கு பார்க்க வாங்க
முதுகின் மீது பாகன் வாரான் பார்க்க வாங்க
நீண்ட துதிக்கை ஆட்டி வருது பார்க்க வாங்க
நெற்றிப் பட்டம் கட்டி வருது பார்க்க வாங்க
கண்ணைக் கண்ணை உருட்டி வருது பார்க்க வாங்க
கழுத்தில் மணியை ஆட்டி வருது பார்க்க வாங்க

குறிப்புகள்

குள்ள குள்ள வாத்து
குவா குவா வாத்து
மெல்ல உடலைச் சாய்த்து
மேலும் கீழும் பார்த்து
மெல்லமாக நடக்கும்
சின்ன மணி வாத்து

பொதுவாகக் குழந்தைகள் தாங்களாகவோ, தங்கள் நண்பர்களோடோ எப்போதும் பாடல்கள் பாடிக் கொண்டிருப்பர். அவ்விதமாகப் பாடிக் கொண்டிருக்கும் போது தங்களை யாரும் திட்டுவார்களோ, கேலி செய்வார்களோ அல்லது தண்டிப்பார்களோ என்று எண்ண மாட்டார்கள். பாடலின் எதுகை மோனையில் ஒவ்வொரு குழந்தையும் ஈர்க்கப்பட்டு ஆர்வத்தோடு படிப்பர்.

பலமுறை அப்பாடல்களின் அர்த்தம் அறிந்தோ, அர்த்தமற்ற வார்த்தைகளையோ பயன்படுத்தி மகிழ்வர். வார்த்தை விளையாட்டால் உத்வேகத்தோடு ஆக்கத்திறனையும் அதிகப்படுத்திக் கொள்வர்.

(எ.கா) முறுக்கு முறுக்கு முறுக்கு
வாயிலே போட்டு நொறுக்கு
அரக்கு அரக்கு அரக்கு
தீயிலே காட்டி உருக்கு
எருக்கு எருக்கு எருக்கு
எருக்கஞ் செடியை நறுக்கு

குழந்தைகள் வார்த்தைகளால் கவரப்பட்டு ஆர்வத்தோடு அபிநயத்தோடும் பாடி மகிழ்வர்.

வட்டமான தட்டு
தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு
எட்டில் பாதி விட்டு
எடுத்தான் மீதம் கிட்டு
மீதம் உள்ள லட்டு
முழுதும் தங்கை பட்டு
போட்டாள் வாயில் பிட்டு
கிட்டு நான்கு லட்டு
பட்டு நான்கு லட்டு

குறிப்புகள்

மொத்தம் தீர்ந்தது எட்டு
மீதம் காலித்தட்டு

செய்யுள் கருத்துக்களைத் தெரிவிக்கும் சக்தி வாய்ந்த வழிமுறையாகும். மேலும் நம் வாழ்வோடு தொடர்புபடுத்திக் கொள்ளலாம். பாடல்களைத் தொடர்ச்சியாகக் கேட்பதால், மொழியின் அடிப்படை அமைப்புகளையும் அறிந்து கொள்வர். புதிய வார்த்தைகளைத் தெரிந்து கொள்வர். வார்த்தைகளின் ஓசை நயத்தையும் சந்த நயத்தையும் பாராட்டி மகிழ்வர். மேலும் அவற்றைத் தங்கள் வாழ்வோடு தொடர்புபடுத்திக் கொள்வர். ஒரே பாடலை இரு குழந்தைகள் வாசிக்கும்போது தங்கள் அனுபவத்தோடு தொடர்புபடுத்தியே புரிந்து கொள்வர்.

எனவே வகுப்பறையில் பாடல்களைப் பயன்படுத்துவதால் குழந்தைகளின் ஆக்கத்திறன் மேம்படுத்தப்படும் என்பதனைக் கல்வியாளர்களே தீர்மானிக்க வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 6**

1. பாடல்கள் மற்றும் செய்யுள்களைக் கேட்பதால் குழந்தைகள் எதனைத் தெரிந்து கொள்கிறார்கள்?

   (அ) வார்த்தை (ஆ) ஒலி (இ) ஓசைநயம் (ஈ) மொழியின் அமைப்பு

2. மூன்றாம் வகுப்பு மாணவர்களிடம் கீழ்வரும் பாடலைக் கூறி மேலும் சில வரிகளைச் சேர்க்கச் சொல்லலாம்.

காட்டுக்குள்ளே சென்றேன்
அங்கு என்ன பார்த்தேன்?
சிங்கம் ஒன்று இருந்தது
என்னைப் பார்த்து கர்ஜித்தது
காட்டுக்குள்ளே சென்றேன்
அங்கு என்ன பார்த்தேன்?
பாம்பு ஒன்று தொங்கியது
என்னைப் பார்த்து சீறியது
காட்டுக்குள்ளே சென்றேன்
அங்கு என்ன பார்த்தேன்
யானை ஒன்று அசைந்தது
என்னைப் பார்த்து பிளிரியது

இப்படியாக வாக்கியங்களை சேர்த்துக்கொண்டே போகலாம்.

3. இப்பாடலின் மூலமாக குழந்தைகளுக்கு மொழி கற்றலில் கொடுக்கப்படும் வாய்ப்புகள் யாவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

4. மொழியை கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை பாடல்கள் மூலம் ஏற்படுத்த முடிகிறதா?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 4.4.2. படங்கள் வழி கலந்துரையாடல்

படங்கள் மூலம் கற்பிப்பது ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரையுள்ள குழந்தைகளிடம் உரையாடுவதற்கும், கலந்துரையாடுவதற்கும் அதிக வாய்ப்பினை ஏற்படுத்தித் தருகிறது. தொடக்க நிலை பள்ளிகளில் உள்ள குழந்தைகளுக்குள் படங்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவர். படங்களைப் பர்க்கும் பொழுதும், வரையும் பொழுதும் அதிக மகிழ்ச்சி அடைகின்றனர். புத்தகத்தைத் திறந்தவுடன் முதலில் குழந்தைகளின் கவனத்தை ஈர்ப்பது படமாகும். இது அவர்களை தானாக பேச வைக்கவும் உந்துகிறது. மேலும் பெரியவர்களால் சிந்திக்க முடியாத அளவிற்கு குழந்தைகள் சிந்திக்கின்றனர். மூன்றாம் வகுப்பு குழந்தையுடன் ஒரு படம் குறித்து கலந்துரையாடும் போது அவன் தன் அனுபவம் மூலமாக தற்கருத்தினை ஏற்படுத்திக் கொள்கிறான். சில எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு.

(i) ஒருவர் பசுமையான காட்டிற்குள் செல்லுதல். ஒரு சிறுவன் குடிசை உள்ளே நுழைகிறான்.

(ii) ஒரு சிறுமி மரம் ஏறுகிறாள். அவளை ஒரு சிறுவன் மரம் பெரியதாக உள்ளது. அடிபட்டு விடும் எனத் தடுத்து விடுகிறான். ஒரு சிறுமி மரத்தில் ஊஞ்சல் ஆடுகிறாள். மரம் அசைகிறது. மலைகளில் நிறைய வளர்ந்து இருக்கிறது.

(iii) சூரியன் காலையில் உதிக்கிறது, பறவைகள் காலையில் பறக்கின்றன சூரியன் வெளியே வருகிறது. அஃது ஒரு மாலைப்பொழுது சூரியன் அஸ்தமாகிறது.

(iv) மனைவி வீட்டிற்குத் திரும்புகிறாள் ஒரு பெண் தண்ணீர் எடுத்துச் செல்கிறான்.

(v) இரண்டு கொக்குகள் பறந்தன

மேற்குறிப்பிட்டுள்ள படங்கள் மூலமாக வெவ்வேறு உரையாடல்களை நிகழ்த்துவார்கள். அவர்களுக்குப் படைப்பாற்றல் திறனும், பகுத்தாராயும் திறனும் வளர்கிறது. செய்தித்தாள்கள், விளம்பரங்கள், பயணச்சீட்டுகள், நாட்காட்டியில் உள்ள படங்கள் குழந்தைகளைத் தாங்களாகவே பேசத் தூண்டுகின்றது. அவர்களுக்குக் கருத்து சுதந்திரம் தந்து அவர்கள் கூற வரும் கருத்துகளை தங்கு தடையின்றி கூறச் செய்தல், ஆசிரியர்கள் கேள்வி கேட்பதன் மூலம் படத்தின் பொருளைக் கவனத்திற்கு கொண்டு செல்லுதல். இதன் வழியாக குழந்தைகளிடம் கூர்சிந்தனைத் திறன் வளர்க்கப்படுகிறது. படங்கள் பற்றிய கேள்விகள் கேட்பதால் குழந்தையின் திறன்கள் கூர்மையாக்கப் படுகிறது. கேட்கப்படும் கேள்விகள் குழந்தைகளின் அனுபவங்களை தொடர்பு படுத்துவதாகவும், தர்க்க சிந்தனை மற்றும் கற்பனையை வளர்ப்பதாகவும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக கொடுக்கப்பட்ட படங்களிலிருந்து சில கேள்விகள் கேட்டல்.

1. மரத்தின் கீழே என்னென்ன வைக்கப்பட்டுள்ளன?
2. கிணற்றின் அருகில் நின்று கொண்டு ஏன் சிறுமி அழுகிறாள்?
3. ஏன் கிராமத்து பெண்கள் கிணற்றின் அருகில் நிற்கிறார்கள்? அவர்கள் எதைப்பற்றி பேசுகிறார்கள்?
4. பெண்கள் வீட்டிற்கு சென்றவுடன் என்ன செய்வார்கள்?
5. நீங்கள் கிராமத்துக்குச் சென்றுள்ளீர்களர் ஆம் எனில் அங்கு என்னவெல்லாம் பார்த்தீர்கள்?

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 7**

1. படத்தில் என்னென்ன பொருள்கள் உள்ளன? என்ன வாய்ப்புகள் காணப்படுகின்றன

   (அ) காரணம் அறிதல்

   (ஆ) ஆராய்தல்

   (இ) கற்பனை செய்தல்

   (ஈ) தொடர்புபடுத்துதல்



குறிப்புகள்

2. படத்தைக் காண்பித்து குழந்தைகளிடம் என்ன கலந்துரையாடல் செய்யலாம்? என்ன கேள்விகள் கேட்கலாம். அதை மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து அனுபவங்களை எழுது.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 4.4.3. கதை கூறல்

தொடக்கநிலைப் பள்ளிகளில் கதை கூறுதல் குழந்தைகளின் ஆர்வத்தையும், படைப்பாற்றலையும் வளர்க்கிறது. குழந்தை தன்நண்பரிடம் கதை கூறும்போது தான் கேட்டதை விட தன் கற்பனைகளையும் சேர்த்து கூறுகிறது. இதன் மூலமாக குழந்தைகள் வார்த்தையின் பொருளை புரிந்து கொள்வது மட்டுமல்லாமல் வெவ்வேறு சூழ்நிலையையும் புரிந்து கொள்கிறார்கள். இச்செயல் அக்குழந்தையின் கற்பனைத் திறனை வளர்க்கிறது. கதை கூறல் மூலமாக குழந்தைகளின் திறன் வெளிக் கொணரப்படுகிறது. எடுத்துக்காட்டாக கதை கூறலின் போது அடுத்து என்ன நிகழும் எனக் குழந்தைகள் ஆர்வத்துடன் கேட்பர். கதைகள் புரியும் போது அடுத்து என்ன நிகழும் என யூகித்துக் கூறி விடுவார்கள். இதன்மூலம் குழந்தையின் தன்னம்பிக்கையும், யூகித்தலும் துல்லியமாக இருக்கும். கதை கூறுதலானது குழந்தையை தன் எதிர்கால வாழ்க்கைக்குத் தயார்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக தங்க முயல் மற்றும் சிங்கக் கதை வாழ்க்கையில் ஏற்படும் தடைகளை எதிர்கொள்ளத் தயார்படுத்துகிறது. கதை கூறும்போது அதனைத் தன் வாழ்க்கை நிகழ்வுடன் தொடர்புபடுத்த வேண்டும். கதை கூறும்போது முக்கியமான பகுதியினை கூறுபவர்கள் மிகைப்படுத்தி கூறுவார்கள். இதன் மூலமாக வாழ்க்கையின் நிகழ்வுகளையும், நடத்தைகளையும் வடிவமைப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. கதை கூறுபவர் கதை கூறும் விதமானது குழந்தைகளிடம் தாக்கத்தை ஏற்படுத்துகிறது புதிய வார்த்தை உணர்ச்சி பூர்வமாகக் கூறும் போது குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்வார்கள். இது குழந்தைகளின் சொல்லாற்றலையும், கேட்கும் திறனையும் வளர்கிறது.

கதை கூறி முடித்த பிறகு சிறு விவாதித்தல் என்பது ஒருவகையான சிரமமாக இருந்தாலும் ஆசிரியர் அதனைப் பகுத்து முன்பாகவே தயார் செய்வதன் மூலம் எளிதாக அமையும். எல்லா ஆசிரியர்களும் கதை கூறி முடித்த பிறகு மாணவர்களிடம் கேள்வி கேட்பதை ஒரு சரியான முடிவாகக் கருதுவார்கள். ஆனால் வினாக்கள் கேட்பதை விட அவர்களிடம் கலந்து ஆலோசிப்பது என்பது சரியான மதிப்பீடு முறையாக அமையும்.

குறிப்புகள்

குழந்தைகளிடம் கதை கூறுதலை விட அவர்களிடமே கதைகளைக் கேட்டுப்பெறுவது சிறந்த முறையாகும். இது குழந்தைகளின் திறமையை வளர்ப்பதுடன் திறமையை வெளிக்கொணர்வதற்கு உதவுகிறது. ஆசிரியர் கூறிய கதைகளை மாணவர்கள் மீண்டும் மீண்டும் சொல்வதை விட அவர்கள் எந்த கதையைச் சொல்ல விரும்புகிறார்களோ அதைக் கேட்பது சிறப்பானதாகும்.

கதையில் வரும் கதாபாத்திரம் மற்றும் அதன் நடத்தைகளிலும் குழந்தைகள் தங்கள் அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பார்ப்பார்கள். வகுப்பறையில் சுதந்திரமாக செயல்பட வைத்து கதையினைப் பற்றிக் குழந்தையின் கருத்தினை கூற வாய்ப்பளிக்க வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 8**

1. குழந்தைகளுக்கு கதை சொல்வதோடு வேறு தேவை என்ன?

   (அ) கதையை அவர்கள் வாசிக்கச் செய்தல்

   (ஆ) கதையை அவர்கள் மனனம் செய்தல்

   (இ) கதையை அவர்கள் ஒப்புவித்தல்

   (ஈ) கதையை கேட்கச்செய்தல்

2. முதல் மற்றும் இரண்டாம் வகுப்புக் குழந்தைகளிடம் அவர்கள் எந்தவிதமான கதைகளைக் கேட்க விரும்புகிறார்கள் எனக் கேட்டு அறிதல், அவற்றை கரும்பலகையில் எழுத வேண்டும்.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. கதையை அமைக்கும்போது குழந்தையை ஒரு வாக்கியத்தை கூறச் செய்து அதனைக் கரும்பலகையில் எழுதச் செய்ய வேண்டும். தங்களின் அனுபவத்தைக் கீழ்வருவனவற்றுள் குறிக்க.

   (அ) கதை எதை மையமாகக் கொண்டுள்ளதோ அதனை பயன்படுத்துவீர்களா்

   (ஆ) குழந்தைகள் கூறும் வார்த்தைகளைப் பயன்படுத்துவீர்களா்

   (இ) இச்செயல்பாட்டில் தங்களின் பங்கு என்ன?

   (ஈ) இச்செயல்பாட்டில் ஏற்பட்டுள்ள தடைகள் என்ன?

குறிப்புகள்

## 4.4.4. நாடகம் / கலையரங்கம் / நடித்தல் மூலமாக மொழிதிறனை வளர்த்தல்

நாடகம் என்பது குழந்தைகளுக்கு புதிதல்ல. குழந்தைகள் கேலிச்சித்திரங்கள் மூலமாகவும், படங்களில் வரும் கதாபாத்திரங்கள் மூலமாகவும் அல்லது விளையாட்டின் போது அம்மா, அப்பா போலவும் பொம்மைகளுக்கு திருமணம் செய்வது போலவும் பள்ளிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நடித்துக் காட்டவும் செய்கின்றனர். இதன் மூலம் குழந்தைகள் நடித்தல் முறையை விரும்புகின்றனர். நடித்தல் முறையில் குழந்தைகள் மற்றொருவரை போலச் செய்தல், மிகைப்படுத்திக் கூறுதல், அனுமதி கேட்டல் போன்றவற்றை விரும்புகின்றனர். குழந்தைகளிடம் இயல்பாகவே நடித்தல் திறன் உள்ளது. ஆனால், வகுப்பறையில் அதனை வெளிக் கொணர்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துவதில்லை. இதன் காரணமாக குழந்தைகள் பள்ளி ஆண்டு விழாக்களிலோ அல்லது விருந்தினர் வருகையின் போது மட்டுமே நடித்தல் முறையை மேற்கொள்கின்றனர். இது போன்ற சூழ்நிலைகளில் ஆசிரியர் எழுதிக் கொடுக்கும் உரையாடலை பேசுவது நாடகம் நடித்தலின் போது சற்று கடினமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

வகுப்பறையில் இம்முறையை பயன்படுத்தும்போது மேற்குறிப்பிட்ட திறன்கள் வளரும். நாடகத்தினை ஒரு மொழிச்செயல்பாடாக வழங்கப்படுவதற்கு இரண்டு பண்புகளான சுதந்திரம், மற்றும் மகிழ்ச்சியான சூழல் தேவைப்படுகிறது. வகுப்பறையில் நாடக முறையினை நிகழ்த்துவதற்கு ஆசிரியர்களும், மாணவர்களும் எவ்வித முன்னேற்பாடுகளையும் செய்யத் தேவையில்லை. மாணவர்களிடம் நாடகத் திறமையை இயற்கையாக வளர்ப்பதற்கு ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். குழந்தைகள் தங்கள் சுற்றுப்புறத்தில் பார்க்கக்கூடிய எந்தவொரு நிகழ்வுகளையும், கதைகளையும் அல்லது கேலி சித்திரங்களையும் தொடக்கக் கல்வி நிலையி?ல் இருந்தே நடித்துக் காட்டச் செய்யலாம். உதாரணமாக எந்தவொரு விலங்கைப் பார்த்தாலும் அதன் உடல் அசைவுகள், மற்றும் உடலமைப்பு மற்றும் பலவற்றைப் பற்றி நடித்துக்காட்டச் செய்யலாம். உயர் தொடக்க நிலை வகுப்புகளில் ஆசிரியர் மாணவர்களை சிறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவும் தலைப்புகளைத் தாங்களே எடுத்துக்கொண்டு, தலைப்பிற்குரிய உரையாடல்களை தேர்ந்தெடுத்தெழுதி நடித்துக் காட்ட வேண்டும். அதே சமயத்தில் வகுப்பறையில் பாரம்பரிய விளையாட்டுகளிலும், நாட்டுப்புற கதைகளிலும் பங்கேற்பதோடு விட்டுவிடாமல் பண்பாடு, கலாச்சார சூழலோடு இணைக்க வேண்டும். மேலும் நாடகத்தின் மூலம் திறமையை வெளிப்படுத்த வேண்டும்.

## 4.4.5. பாட இணைச் செயல்பாடுகள்

வகுப்பறை செயல்பாடுகளில் கவனித்தலுக்கும் பேசுதலுக்கும் குழந்தைகளுக்கு வேறு சில செயல்பாடுகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தரலாம்.

மாணவர்களின் தனிப்பட்ட படைப்பாற்றல் திறனையும், கற்பனைத் திறனையும் வளர்க்கும் வகையில் இந்த செயல்பாடுகள் அமைய வேண்டும். பாட செயல்பாடுகளுடைய தலைப்பிற்கு மாணவர்கள் உடனுக்குடன் கொடுக்க தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கும் வகையிலும் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையிலும் அமைய வேண்டும். கொடுக்கப்பட்ட தலைப்புகள் கவனித்தலுக்கும், கற்றலுக்கும், மாணவர்களுக்கு ஆர்வமூட்டக் கூடிய வகையில் அமைய வேண்டும்.

**உதாரணமாக,**

அலாதீன் அற்புத விளக்கினை நான் கண்டு பிடித்தால் (அல்லது) நான் மந்திரவாதியாக இருந்தால் (அல்லது) நான் கோமாளியாக இருந்தால்

**பட்டிமன்றம்**

ஒரு குறிப்பிட்ட தலைப்பைப் பற்றி இரு கோணங்களில் வாத, எதிர் வாதங்களில் ஈடுபட்டு அதனைப் பட்டிமன்ற முறையில் தீர்வு காணுதல். பட்டிமன்றத்தில் வாதிடும் முறையில் உள்ள கருத்துகள் பார்வையாளர்களைக் கவரக்கூடியதாகவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

**உதாரணமாக,**

(அ) அறிவியல் தொழில்நுட்பம் பண்பாட்டிற்கு துணை நிற்கிறதா் பாதிக்கிறதா்

(ஆ) தொழிற்சாலைகள் வளர்ச்சி வரமா் சாபமா்

(இ) துரித உணவு வகைகள் உடல் நலத்திற்கு நன்மையா் தீமையா் அனைத்து நிலையில் உள்ள குழந்தைகளுக்கும் இந்தச் செயல்பாடுகள் கொடுக்கப்பட வேண்டும். இந்தச் செயல்பாடு மாணவர்களின் சிந்தனையைத் தூண்டி அவனுடைய எண்ணங்களுக்கும், பேசுதலுக்கும் உள்ள தொடர்பினை தர்க்க ரீதியான முறையில் அனுபவத்தின் வாயிலாக பெற வாய்ப்பளிக்கிறது. பட்டிமன்றத்தின் வாயிலாக திறன்மிக்க பேச்சாளராகவும், கவனிப்பாளராகவும் மாணவர்கள் உருவாகக் காரணமாகிறது.

வகுப்பறையில் ஆசிரியர்களுக்கு இயற்கையாகவே மாணவர்கள் கூறுவதை பொறுமையாகவும், மாணவர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனப் பக்குவம் இருக்க வேண்டும்.



குறிப்புகள்

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 9**

1. வகுப்பறையில் குழந்தைகளை விளையாட்டு முறையில் ஈடுபடுத்தும் பொழுது போலச் செய்தல், மிகைபடுத்தி செய்தல் மற்றும் பயிற்சிகள் கொடுக்கப்படும் பொழுது எவ்வகை திறன்களை பெறுகிறார்கள்?

   அ) பேசுதல் திறன்

   ஆ) உரையாடுதல் திறன்

   இ) மனப்பாடம் செய்யும் திறன்

   ஈ) நடிக்கும் திறன்

2. ஒரு தலைப்பைக் கொடுத்தவுடன் அந்தத் தலைப்பின் கீழ் ஏழாம் வகுப்பு மாணவர்களை உடனடியாக பேசும் திறனை வளர்த்தல்

   ..................................................................................................

   ..................................................................................................

   ..................................................................................................

## 4.5. சரியாக, சரளமாகப் பேசுதல்

தடையின்றிப் பேசுதல், தவறின்றிப் பேசுதல் மொழி ஆற்றலின் இரண்டு கூறுகள் ஆகும். வகுப்பறையில் ஆசிரியர்கள் கற்பித்தல் மாணவர்களைத் தடையின்றிப் பேசுதலுக்கும், தவறின்றிப் பேசுதலுக்கும் முக்கியத்துவம் கொடுத்து செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு வார்த்தைகளை சரியான முறையில் உச்சரித்தல், இலக்கணத்தின் அடிப்படை விதிகளையும், மேலும் சொல்லியல் முறைகளிலும் தெளிவாகக் கற்றுக் கொள்ளும் திறன் வளர்கிறது. இந்தத் தவறின்றி பேசுதல் திறன் தொடக்க நிலை குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் இடையே வேறுபடுகிறது. ஏற்கெனவே மூன்றாவது அலகில் பார்த்தது போன்றே அனைத்து நிலை குழந்தைகளும் “முயன்று தவறிக் கற்றல்” மூலம் கற்றுக்கொள்கிறார்கள். குழந்தைகள் முயன்றுதவறிக் கற்கும் பொழுது மொழிக் கற்றலில் உள்ள மூன்று வயதுக் குழந்தை தன்னை அறியாமலேயே விதிகளையும் கற்றுக் கொள்கிறான்.

**உதாரணமாக,**

“அவன் விளையாடச் சென்றான்”



குறிப்புகள்

அவன் என்பது ஒரு நபரைக் குறிக்கும் சொல். ஆதனால் இச்சொல்லானது ஒருமையில் முடிந்துள்ளது.' அவர்கள் விளையாடச் சென்றார்கள்.' இதில் அவர்கள் என்ற சொல்லானது பல நபர்களை குறிப்பதால் பன்மையில் முடிகிறது. இதனைத் தொடக்க நிலை குழந்தைகள் இலக்கண விதிகள் தெரியாத போதும் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

பேசுதல், படித்தல், எழுதுதல் இந்தத் திறன்கள் வளர வளர குழந்தைகளிடம் மொழித்திறன் வளரும் மு ம். இலக்கண பிழைகளைக் காட்டிலும் பாடப் பொருளையும் அதிலுள்ள பொருள்களையும் புரிந்து கொள்ள முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மொழி ஆசிரியருக்கு, தடையின்றிப் பேசுதல் தவறின்றி எழுதுதல் இவை இரண்டில் எது முக்கியம் என்பது குழப்பமாக உள்ளது.

முந்தைய கால ஆசிரியர்கள் மொழிக்கற்றலில் தடையின்றி பேசுதலில் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். இலக்கண முறைப்படி சரியாக பேசவும்› எழுதவும் வலியுறுத்தியுள்ளார்கள். இதை அதாவது மொழித் திறன்களை வளர்ப்பதற்கு தொடர்ச்சியாக மதிப்பீடு செய்ய வேண்டும். வகுப்பறையில் மொழித்திறன்களை வளர்ப்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்புகள் கொடுக்கப்படுவதில்லை. தேர்வுகளை மட்டுமே மையமாக வைத்தே மதீப்பீடு செய்யப்டுகின்றது.

சில ஆசிரியர்கள் மொழியினை உணர்வுகள் மற்றும் அனுபவங்கள் மூலமாகவே வெளிப்படுத்த முடியும் என்று நினைக்கிறார்கள். இவ்வகை ஆசிரியர்கள் தடையின்றி பேசுதலுக்கே முக்கியத்துவம் தருகிறார்கள். இலக்கணத்தை காட்டிலும் பொருள் புரிந்து கொள்வதிலும்› சரளமாகப் பேசவும் பேசுவதைக் கேட்பவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.; மொழித் திறன்களை அதிகமாகப் பயன்படுத்தும் பொழுது தடையின்றி பேசுதல் திறன் அதிகமாக வளருகின்றது.

இந்த இரண்டு முறைகளுமே சரிதான் என்ற எண்ணம் ஏற்படுகிறது. மொழியைக் கற்பதில் மாணவர்களுக்குத் தடையின்றி பேசுதல் திறனும்› தவறின்றி பேசுதல் திறனும் வளருகின்றது. பத்தாம் வகுப்பு வரும் பொழுது ஒரு மாணவன் மொழியை தடையின்றி பேசத் தொடங்குகிறான். பத்தாம் வகுப்பிற்கு அடுத்து ஒரு மாணவன் தவறின்றி எழுதுதலுக்கு முக்கியத்துவம் அளிக்கிறான். இந்த முறையின் மூலமாக அவனது மொழி ஆற்றல் வளருகின்றது.



குறிப்புகள்

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 10**

1. பறவைகள் பறந்தன இந்த வாக்கியத்தில் பறந்தன என்ற சொல் எதனைக் குறிக்கிறது?

   அ) உரிச்சொல் ஆ) பெயர்ச்சொல்

   இ) வினைச்சொல் ஈ) இணைப்புச்சொல்

2. உன் பார்வையில் தவறின்றிப் பேசுதலையும், தடையின்றிப் பேசுதலையும் விவரி.

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

3. மொழிக் கற்றலில் தடையின்றிப் பேசுதல் முக்கியமா் தவறின்றிப் பேசுதல் முக்கியமா் உமது கருத்து யாது?

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

## 4.6 தொகுப்புரை

பேசுவதும், கேட்பதும் இயந்திர ரீதியான செயல்பாடு அன்று. தாய் மொழியை பேசுவது ஒரு மாணவனுக்கு எளிது. மொழிகளைப் பேசுவதற்கு அவன் தொடர்ந்து முயற்சி எடுக்க வேண்டும். வகுப்பறையில் பேசுவதற்கு மாணவனுக்கு வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். இது குழந்தையின் ஆளுமை வளர்ச்சியிலும், சமூக பழக்கவழக்கங்களிலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்துகிறது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இருக்கக் கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளவும். வாய்ப்புகளை வெளிப்படுத்தவும் ஆசிரியர்கள் ஊக்குவிக்க வேண்டும். இன்னொரு முக்கியத்துவம் மொழியைக் கற்பதில் தவறின்றி பேசுதலைக் காட்டிலும் தடையின்றிப் பேசுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

## 4.7. மேற்கோள் நூல்கள்


- அக்னி கோத்ரி சு.மு. பாக்ஸி, டிஸ்டா (2007) கன்ஸ்ட்ரைக்ஸன் ஆப் நாலேஜ் உதய்பூர் வித்யா பவன் சொசைட்டி.
- அக்னி கோத்ரி சு.மு. பாக்ஷ்ஷான் கி பாக்ஷா (1999) சிகான் கி சமாட்டா, பாக் 1,2
- (சாய்சிங் சன்பார்ப்) போபால் : இலக்விபா குமார் கிருஷ்ணா (1966) பாக்சான் கி பாக்ஷா அல்லது அத்யாபாக் நியூடெல்லி.
- தேசிய புத்தக நிறுவனம்.
- ரிச்சர்ட்ஸ், ஜாக் (2008) டீச்சிங் லிசனிங் அண்ட் ஸ்பீக்கிங் ப்ரம் தியரி டூ ப்ராக்டிஸ், நியூயார்க் கேம்ப்ரிட்ஸ் யுனிவர்சிட்டி யுனிவர்சிட்டி ப்ரஸ்




## 4.8. பயிற்சிகள்

1. கதை கூறுதல் மூலம் எந்த திறனை குழந்தைகளுக்கு வளர்க்க முடியும்?
2. குழந்தைகள் பேசிய உடனே மதிப்பீடு செய்தல் சரியா் உமது பார்வை என்ன?
3. வகுப்பறையில் கலந்துரையாடுவதன் மூலம் ஒரு கதையை கவனிக்கும் திறனையும், பேசுதல் திறனையும் வளர்க்க முடியுமா்
4. குழந்தைகளுக்கு கலந்துரையாடலுக்கு எந்த முறையில் ஊக்கமளிக்க விரும்புகிறீர்கள்? அது ஏன்? எடுத்துக்காட்டுடன் விளக்குக?
5. கவனித்தல் எவற்றையெல்லாம் உள்ளடக்கியது?
6. சில குழந்தைகள் வகுப்பறைச் செயல்பாடுகளில் விலகியே இருப்பார்கள். அவர்கள் எந்தச் செயல்பாடுகள் மூலம் வகுப்பறைச் செயல்பாடுகளில் ஈடுபட வைக்க முடியும்.
7. மூன்றாம் வகுப்பு குழந்தைகளுக்கு நான்கு வரி பாடலை வகுப்பறையில் சொல்வதற்கு பயிற்சி அளித்தல்.
8. வீட்டில் பேசுவதற்கும், பள்ளியில் பேசுவதற்கும் இடையே ஏன் வேறுபாடு ஏற்படுகிறது.
9. வகுப்பறையில் கதை கூறும் பொழுது ஒரு மாணவன் தவறான உச்சரிப்பை பயன்படுத்துகிறான். இதனை சரிசெய்து அவனை முன்னேற்றமடையச் செய்ய எவ்வாறு திட்டமிட வேண்டும்.

குறிப்புகள்

10. மொழியை கற்றுக்கொள்ளும் பொழுது தவறின்றி பேசுவதற்கு எந்த அளவு நிலையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். தவறின்றிப் பேசுதலுக்கு எந்த நிலையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். ஏன்?

## செயல்பாடுகள்

கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ள குழந்தைகளை உற்றுநோக்க வேண்டும். அவர்கள் தானாகவே பேசுவதை கவனித்து எவ்வாறு அதனை உபயோகிக்க வேண்டும். வகுப்பறையில் அந்த உரையாடலை எவ்வாறு உபயோகிக்க வேண்டும் என் சரிபார்த்தல்.

ஒரு கதையை நாடக முறையில் மூன்றாம் மற்றும் ஐந்தாம் வகுப்பு குழந்தைகளை வகுப்பறையில் நடிக்கச் செய்தல். நடிப்பதற்கு தேவையான உரையாடல்களை அவனே எழுதி வகுப்பறையில் நடிக்கச் செய்ய வேண்டும்.

# அலகு 5

## படித்தல்

குறிப்புகள்

### அமைப்பு

5.0 முன்னுரை

5.1 கற்றலின் நோக்கங்கள்

5.2 படித்தல் என்பதன் பொருள்

5.3 படித்தலின் முக்கியத்துவம்

5.4 படித்தலை கற்பிப்பதற்கான வழிமுறைகள் (அல்லது) உத்திகள்

5.4.1 படித்தலை கற்பித்தலில் உள்ள முறைகள் (மற்றும்) அதன் வரம்புகள்

5.4.2 படித்தல் திறன்களைச் செயல்படுத்துதல்

5.4.3 படித்தலை கற்பிப்பதற்கு நாம் செய்ய வேண்டுவன.

5.4.4 செயல்பாடுகள்

5.5 படித்தல் (மற்றும்) எழுதுதல் திறனில் உள்ள தொடர்பு

5.6 தொகுப்புரை

5.7 பார்வை நூல்கள்

5.8 பயிற்சிகள்

### 5.0. முன்னுரை

படித்தல் என்றால் என்ன என்பதை இவ்வலகில் புரிந்து கொள்ளப்போகிறோம். ஒருவர் படித்தல் செயல்பாட்டில் உள்ள பொருளைப் புரிந்து கொள்ள முடிகிறது. படித்தலில் உள்ளடங்கிய செயல்களையும் மதிப்பீடு செய்ய முடிகிறது. படித்தலுக்கான தேவை மற்றும் படித்தல் மற்றும் எழுதுதலுக்கு உள்ள தொடர்பினை கலந்துரையாட முடிகிறது. தொடக்கநிலை பள்ளியின் முக்கிய நோக்கம் குழந்தைகளை வாசிக்கச் செய்தல், இது குழந்தைகளிடையே வாசித்தலுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது.

படித்தலுக்கான கற்பித்தலை ஏற்படுத்த வேண்டும். பாடப்பொருளும் மிகுதியான ஆர்வத்தை ஏற்படுத்த கூடியதாக இருக்க வேண்டும்.

படித்தலுக்கான முறைகள் என்னவென்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும்.

குழந்தைகள் படிப்பதை ஒருமுகமாக படிக்கிறார்களர் பொருளுணர்ந்து படிக்கிறார்களர் என்பதைக் கவனிக்க வேண்டும்.

## 5.1. கற்றல் நோக்கங்கள்

இந்த அலகை வாசித்த பிறகு,

1. படித்தலின் பொருள் என்ன என்பதை புரிந்துகொள்ளுதல்.
2. படிக்க இயலாத குழந்தைகளின் காரணங்களைப் புரிந்து கொள்ளுதல்
3. மொழியை முழுமையாகத்தான் கற்றுக்கொள்ள இயலும். சிறு சிறு பகுதிகளாகவோ / துண்டுகளாவோ கற்க இயலாது என்பதைப் புரிந்து கொள்ளுதல்
4. படித்தலுக்கு தேவையான செயல்முறைகளைக் கண்டறிதல்.
5. உத்திகளைப் பயன்படுத்தி வகுப்பறையில் எவ்வாறு வாசிக்க வேண்டும் என்பதைக் கற்பித்தல்
6. வாசித்தலுக்கும், எழுதுதலுக்கும் உள்ள தொடர்பை தெளிவாக்குதல்

## 5.2. படித்தல் என்பதன் பொருள்

தொடக்கநிலை ஆசிரியர்களுக்கு மாணவர்களை எவ்வாறு வாசிக்க கற்பிக்க வேண்டும் என்பதில் கடினமான மற்றும் சவாலான செயல்களாக உள்ளது. ஏனெனில், படித்தல் ஒரு எளிய திறன் அல்ல. அது கடினமானது. பள்ளிக்கு வரும் முன்பே இயற்கையாகவே குழந்தைகள் வாய்மொழியைக் கற்றுக்கொள்கிறார்கள். அதனால் படித்தல் வாய்மொழியிலிருந்து வேறுபடுகிறது. வாசித்தலில் நிறைய அறிவுசார் திறன்களும், துணைத் திறன்களும் ஒன்றோடொன்று பிணையப்பட்டுள்ளன. இதில் முக்கிய கேள்வி என்னவென்றால் வாசித்தலின் மூலம் நாம் என்ன புரிந்துகொண்டோம்? பொதுவாக ஆசிரியர்கள் மாணவர்கள் தங்கள் பாடப்புத்தகத்தை சத்தமாக வாசித்தாலே போதும் என்று எண்ணுகிறார்கள்.

மாணவர்கள் தாங்கள் வாசிப்பது தங்களுக்குப் புரிகிறதர் என்பதில் ஆசிரியர்களுக்கு கவலை இல்லை. படித்தல் என்பது கடினமான சவால்களை எதிர்கொள்ளும் படைப்புகளாகும். ஏனென்றால் மாணவர்கள் தாங்கள் வாசிக்கும் புத்தகத்தின் பொருளை தங்கள் சொந்த அனுபவத்தின் மூலம் புரிந்து கொள்கின்றனர். புத்தகத்தில் உள்ள பாடப்பொருளை

புரிந்துகொள்வதில் நமது கண்களும், மனமும் சொற்கள் மீதோ, குறியீடுகள் மீதோ கவனம் செலுத்தவில்லை. ஆனால் நாம் கவனம் செலுத்தும் போது அது சலிப்பாகவும், சுமையாகவும் தெரிகிறது. சரளமாக வாசிப்பவர்களுக்கு எழுத்தின் வடிவமோ, வார்த்தையோ, வாக்கியமோ முக்கியமாகத் தெரிவதில்லை.

1. படித்தல் என்பது கருத்து அல்லது இணைப்பு யோசனைகளை உருவாக்கி அவற்றை மனதில் பதிய வைக்கக் கூடியது.
2. பாடப்பொருளை புரிந்து அதில் உள்ள தாக்கத்தைப் பின்பற்ற முடியும்.
3. படித்தல், எழுத்துகளை அங்கீகரிக்கவோ அல்லது வார்த்தையும் வாக்கியங்களையும் சத்தமாக பேசுவது என்பதல்ல அதைவிடவும் அதிகமானது.
4. படித்தல் என்பது வார்த்தைகளின் உச்சரிப்பு என்பது மட்டும் அல்ல மேலும் பாடப்பொருளை உரையாடும் அளவிற்கு அதன் மூலமாக அனுபவங்களையும் மற்றும் கருத்தியல் கட்டமைப்புகளையும் ஏற்படுத்த முடியும்.
5. படித்தல் என்பது முழுமையான முறையாகும் இதில் எழுத்துகளின் வடிவங்கள், அவற்றின் உச்சரிப்பு, வாக்கிய அமைப்பு, வார்த்தை வாக்கிய பொருள் மற்றும் வரும் முன் கூறும் திறன் போன்றவற்றைக் கொண்டது.
6. எழுதப்பட்ட பொருளின் தகவல்களை அல்லது குறியீடுகளை நினைவில் கொள்வதே படித்தலின் இன்றியமையாத பணியாகும்.
7. இதன் மூலம் நாம் அறிவது என்னவென்றால் படித்தல் என்பது பல திறன்களை உள்ளடக்கியது. அது எழுதப்பட்ட சொல்லில் உள்ள பொருளை தொடர்புபடுத்தி பார்க்க உதவுகிறது. படித்தலின் பொருளே புரிந்து படிப்பதாகும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 1**

1. கீழ்வருவனவற்றுள் படிப்பதற்கு முக்கியமானவற்றைக் குறியிடுக.

   அ) கொடுக்கப்பட்ட பாடப் பொருள்களைப் படித்து உள்வாங்கிக் கொள்ளுதல்

   ஆ) சொற்றொடர்களை வரியாகப் படித்தல்

   இ) சரளமாகவும், உரக்கப் படித்தல்

   ஈ) குறியீடுகளுக்கு முக்கியத்துவம் தருதல்.

குறிப்புகள்

*2.* படித்தலுக்கான முக்கிய கருத்துகள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

*3.* படித்தல் ஒரு படைப்பாற்றலை எவ்வாறு ஏற்படுத்தும்?

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

## 5.3. படித்தலின் முக்கியத்துவம்

புத்தகங்கள் இல்லாமல் அறிவை வளர்க்க முடியும். அச்சு எழுத்து மற்றும் இல்லாத பொழுதும், சமுதாயத்தின் வாயிலாக அறிவு, கலாச்சாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை படித்தல் இல்லாமல் அறிந்துகொள்ள முடியாது. இன்றைய சூழ்நிலையில் கூட சமுதாயத்தில் பேச்சு வழக்கில் இவை பகிரப்படுகிறது. இன்றைய உலகத்தில் புத்தகங்கள் ஒரு முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது. வாசிப்பதற்கும், எழுதுவதற்கும் தேவையான ஒன்றாகக் கருதப்படுகிறது. புரிந்து வாசிப்பதன் விளைவாக ஒருவரது ஆளுமை மற்றும் தன்னம்பிக்கை வளர்கிறது. வாசிக்கும் திறன் ஒருவரை அவரது உண்மை உலகத்திற்கு அருகாமையில் கொண்டு வருவது மட்டும் அல்லாமல் அவரால் சென்றடைய முடியாத இடத்திற்கும் கொண்டு செல்கிறது.

வாசிக்கும் திறன் நம்முடைய அறிவைப் பெருகச் செய்கிறது. அது வாசிப்பவரை விரிவான சிந்தனையாளராகவும், தர்க்க சிந்தனை மற்றும் சுதந்திரமான கருத்துக்கள் கொண்டவராகவும் இருக்கச் செய்கிறது.

## 5.4. படித்தலை கற்பிப்பதற்கான வழிமுறைகள் (அல்லது) உத்திகள்

மாணவர்களுக்கு வாசித்தலை கற்பித்தல் கடினமான ஒன்றாகும். ஏனென்றால் வாசித்தலைக் கற்பிப்பதற்கு எளிதான எந்த முறையும் இல்லை. ஒவ்வொரு முறைகளிலும் அதற்கான வரம்புகள் உள்ளன. ஓர் ஆசிரியரால் தான் எந்த முறை வகுப்பறை சூழ்நிலைக்கு உகந்தது என்று முடிவு செய்ய இயலும். படித்தல் திறன் ஒருவர் அடைந்த பிறகு அது அவருக்கு ஊக்கத்தை அளிக்கிறது. ஒரு மாணவனின் வாழ்க்கை இதைச் சார்ந்து அமைகிறது. ஒரு

மாணவருக்கு வாசிக்கும் ஆர்வத்தை ஏற்படுத்தும்போது அவருடைய வளர்ச்சிக்கும் மற்றும் ஆர்வத்துக்கும் எல்லை இருக்காது.



குறிப்புகள்

மாணவர்களுக்கு எப்படி வாசித்தலை கற்பிக்க முடியும். நம்மைச் சுற்றி உள்ளவைகளை பார்த்து ஆராய்ந்தால் நமக்கத் தோல்வியே கிட்டுகிறது. அதற்கான காரணம் என்ன? ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான மாணவர்கள் வாசித்தலை பயில முயற்சி செய்கின்றனர் ஆனால் பல மாணவர்களால் எளிதாக வாசிக்க முடியவில்லை.

சில நேரங்களில் ஆசிரியர்களால் வாசிப்பதில் உள்ள திறன்களையும், அவற்றை எவ்வாறு மேம்படுத்த வேண்டும் என்பதையும் கூற முடிவதில்லை. ஆனால் பல ஆசிரியர்களுக்கு படித்தல் குறித்த உள்ளார்ந்த புரிதல் இருக்கிறது. ஒரு மாணவன் தன் வாசித்ததை புரிந்து கொண்டு அதை அவனுடைய முன் அனுபவங்களுடன் தொடர்புபடுத்திக் கொண்டால்கூட அவனுடைய படித்தல் திறன் மேம்பட்டு விட்டது என்றாகாது. படித்தல் என்பது அச்சிடப்பட்ட அல்லது எழுதப்பட்ட நூலில் உள்ள பொருளைப் புரிந்து கொள்வது ஆகும். அது வரிகளுக்கு இடையில் வாசிக்கக்கூடிய திறனைக் கொண்டது.

மேலே குறிப்பிட்ட வாசித்தலின் வரையறையை ஏற்றுக்கொண்டால் பள்ளிகளில் கொடுக்கப்படும் முறையான அல்லது முறைசாரா படித்தல் முறைகள் உகந்தது அல்ல. எடுத்துக்காட்டாக எழுத்துக்களை சத்தமாக வாசிப்பது, எழுத்துத் தொகுதிகளை மனப்பாடம் செய்தல், புரிதல் இல்லாமல் கதைகளை திரும்ப கூறுதல், புரிதல் இல்லாமல் பாடப்பொருளைச் சத்தமாக வாசிப்பது. இவை சரியான செயல்பாடுகள் என்றாகாது. இதில் பாடப்பொருளையும் அதன் அர்த்தத்தையும் தொடர்புபடுத்த இயலாது. நிறைய பள்ளிகளில் இன்றும் எழுத்து ‘அ’ வை அம்மா உடனும், எழுத்து ‘இ’ யை இலை உடனும் தொடர்புபடுத்தி கூறுகின்றனர். அதே சமயம் ஒரு கதையை படிப்பதன் மூலம் அதன் முழு கருத்தை உள்வாங்கவும் இயலாது. மற்றொரு கருத்துடன் தொடர்புபடுத்தவும் இயலாது. மேலும் கூறவரும் கருத்தினை மீண்டும் மீண்டும் கூறுவதனால் மாணவர்களிடம் சலிப்பு ஏற்பட்டு கவனம் செலுத்த இயலாத நிலைக்கு செல்கின்றனர். மாணவ குழந்தைகளிடம் பல செயல்பாடுகள் அளிப்பதன் மூலம் புது கருத்தை உருவாக்கும் திறனை பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. இதன் மூலம் பல குழந்தைகள் வாசிப்பதற்கு கற்றுக் கொள்கின்றனர். நாம் வாசிப்பதற்கு கற்றுக்கொள்ளும்பொழுது மாணவர்களிடம் சலிப்பும், பாதுகாப்பற்ற சூழலும் உண்டாக்குவதால் பல குழந்தைகள் தொடக்கக் கல்வியை முடிக்கும் முன்பே இடைநிற்றல் செய்கின்றனர்.

குறிப்புகள்

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 2**

1. குழந்தைகளிடம் படிப்பதற்கான ஆர்வத்தை எவ்வாறு ஏற்படுத்த முடியும்?

   அ) பாடப்புத்தகங்களை பயன்படுத்துவதனால்

   ஆ) எழுத்துக்களை மனப்பாடம் செய்வதனால்

   இ) படித்தலுக்கான கற்பித்தல் முறைகளை ஆர்வப்படுத்துதல்

   ஈ) கதைகளைப் பொருள் புரியாமல் மனப்பாடம் செய்ய பழக்குவதனால்

2. நன்றாக வாசிப்பதற்குத் தேவைப்படுவன யாவை?

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

3. தொடக்கக் கல்வியிலேயே மாணவர்கள் பள்ளியை விட்டு செல்வதற்கான காரணங்கள் யாவை?

   ......................................................................................................

   ......................................................................................................

   ......................................................................................................

## 5.4.1. படித்தலை கற்பிப்பதில் உள்ள முறைகள் மற்றும் அதன் வரம்புகள்

வாசித்தலைக் கற்பிப்பதற்கு என்று தனியான விதிகள் எதுவும் இல்லை. ஒருவராலும் அதை எளிதாகவே, வரையறைபடுத்தியோ கூற இயலாது. சரளமாக வாசிப்பவர்கள் தங்களுடைய படித்தல் அறிவை தன் ஆற்றல் மூலம் கற்றுக்கொள்கின்றனர்.

- **குழந்தைகள் படித்தலின் விதிகளை விரைவாக தெரிந்துகொள்ளுதல்**

  இலக்கணம் கற்பித்தல் மூலமாகக் குழந்தைகள் சரளமாகப் பேச வைப்பதற்கு எந்த சான்றுகளும் இல்லை. உச்சரிப்புக்கு பயிற்சி அளித்தல் மூலமாக குழந்தைகளின் வாசிக்கும் திறனை மேம்படுத்தலாம் என்பதற்கு எந்தவித சான்றுகளும் இல்லை. குழந்தைகளுக்கு படித்தல் திறனை விதிமுறைகளின்படி கற்றுத்தர

வேண்டும் என்ற அவசியம் இல்லை. மாறாக தானே படித்தல் திறனைக் கற்றுக்கொள்கின்றனர்.

- **வாசித்தலுக்குக் குழந்தைகள் உச்சரிப்பையும், விதிமுறைகளையும் நினைவில் கொள்ள வேண்டும்**

படித்தல் திறனானது மொழியில் உள்ள வார்த்தைகளின் ஒலியையும், அதற்கான குறியீடுகளையும் தொடர்புபடுத்துவது மூலமாக வளர்கிறது. பாடப்புத்தகத்தில் உள்ள வார்த்தைகளை உச்சரிப்பதன் மூலமாக படித்தல் திறன் பெற்று விட்டான் என்பதில்லை. ஒரு வார்த்தையை உச்சரிப்பதற்கு முன் அதற்கன பொருளை புரிந்திருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அவன் பொருளைப் புரிந்துகொண்டு சரளமாகப் பேச முடியாது. ஓர் எழுத்தை ஒலி மூலமாகத் தெரிவிப்பது தேவையில்லாத ஒன்று. மேலும் நேரம் தான் வீணாகும். நாம் கூர்மையாக கவனிக்கும்போது வாசிப்பவர் எழுத்துக்கான ஒலியை மாற்ற முடியாது. இந்த முறையானது பொருள் புரிவதற்கான முறையல்ல. குழந்தைகள் படித்தல் திறன் மேம்பட உச்சரிப்பானது தனித்தனி வார்தகைகளாகவோ ஒவ்வொரு எழுத்துக்களாகவோ வாசித்தால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

- **ஒரே நேரத்தில் ஓர் எழுத்தையோ அல்லது ஒரு வார்த்தையையோ கற்பிப்பதற்கு முக்கியத்துவம் தருதல்**

சில குழந்தைகள் ஒரு பொருளின் பெயரையோ, ஒரு சில எழுத்துக்கள் மற்றும் வார்த்தைகளை கற்பதற்கு சிரமப்படுகிறார்கள். இவ்விதமான குழந்தைகளுக்கு தொடர்ந்து பயிற்சி அளித்தல் மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம். இம்முறை தவறில்லாத எளிமையான ஒரு கற்றல் முறையாகும். 5 விருந்து 6 வயது உள்ள குழந்தைகளால் ஒரு நாளில் 1000 வார்த்தைகளைக் கற்றுக்கொள்ள முடியும். பெரும்பாலும் இந்த வார்த்தைகள் பெயராக இருந்தால் முதல் முயற்சியிலேயே கற்றுக்கொள்கிறார்கள். இந்த முறையின் மூலம் அவன் கற்றுக்கொள்ளும் அவனால் பகுத்தாராய்ந்து கொள்ள வேண்டும். இம்முறையின் மூலமாக ஒரு வார்த்தை எந்த சூழலில் பயன்படுகிறது என்றும் அந்த வார்த்தைக்கான தன்மையையும் புரிந்து கொள்வதால் அவன் எதிர்கால வாழ்விற்கும் உதவிகரமாக இருக்கும். ஒரு கருத்தை புரிந்துகொள்ள முன்கூட்டியே அனுமானம் செய்வதன் மூலமும் தொடர்ந்து சோதனை செய்தும் அக்கருத்தை மெருகேற்றுகிறான்.

இம்முறையானது குழந்தைகள் செய்யும் தவறினை நாம் காண்பதற்கு உதவியாக உள்ளது. எடுத்துக்காட்டாக நான்கு கால்கள் உள்ள

குறிப்புகள்

மிருகங்கள் அனைத்தையும் நாய் என புரிந்து கொள்கிறான் என்று நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இம்முறையின் மூலமாக நான்கு கால்கள் உள்ள அனைத்தும் நாய் என்று நினைக்கின்றான். நாற்காலிக்கும் நான்கு கால்கள் இருப்பதால் அதையும் நாய் என அனுமானம் செய்கிறான். இதன் மூலம் உயிருள்ளவை, உயிரற்றவை என்ற கருத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவன் வளர்க்கும் நான்கு கால்கள் உடைய மிருகம் மட்டுமே நாய் என நினைக்கிறான் மற்ற நாய்களை நாய் என நினைக்கும் பொதுமை கருத்து அவனிடம் இல்லை.

குழுவில் உள்ளவற்றை, குழுவில் அல்லாததோடு ஒப்பிட்டு பார்த்தால் மட்டுமே கருதுகோளைப் புரிந்து கொள்ள முடியும்.

நாய் அல்லாத நான்கு கால்கள் உள்ள மிருகங்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். இந்த கருதுகோளை மேம்படுத்த வேண்டுமென்றால் அவர்கள் கூர்ந்தாய்வு செய்ய வேண்டும். அல்லது பிறர் கருத்துகளைக் கேட்டறிய வேண்டும். எழுத்துகள் மற்றும் வார்த்தைகளை கற்கும் போது இந்த சூழல் உருவாகிறது. குழந்தைகளுக்கு “அ” என்ற எழுத்தை தனியாகக் காண்பித்து பின்னர் அதனை மீண்டும் மீண்டும் கூறுவதால் எந்த பயனும் இராது இரண்டு எழுத்துக்களையும் (அ,ஆ) ஒரே நேரத்தில் காட்சிப் படுத்தும் வரை அவர்கள் அ யை ஆ எனவும், ஆ யை அ எனவும் கூறுவர். அ, ஆ இரண்டு வார்த்தைகளையும் திரும்ப திரும்பக் கூறுவதைத் தவிர்த்து அவர்களை அ க்கும் ஆ க்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்ளச் செய்யலாம். இதற்கு அவ்விரண்டு எழுத்துக்களையும் ஒரு சேரப் பார்த்து பின்னர் வேறுபடுத்த முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களால் வேறுபடுத்தி அறிய முடியும்.

- **மாணவர்கள் யூகித்து வாசிப்பதை ஊக்குவிக்காமல் எப்போதும் தெளிவாக வாசிப்பதை ஊக்குவித்தல் வேண்டும்**

சரளமாக வாசிக்கும் ஒருவர் சிறிய தகவல்களையும் அதிகமாக பயன்படுத்துவார்கள். ஒவ்வொரு வார்த்தையையும் தனித்தனியாக வாசித்து பொருள் கொள்வதைவிட வாக்கியம் முழுவதையும் வாசித்து பொருள் கொள்வது எளிது. மெதுவாக வாசிப்பதைவிட வேகமாக வாசிப்பது எளிது. மேற்கூறியவற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் கவனமாக படித்தல் மட்டும் சரளமாக படித்தல் ஆகாது. நோக்கமில்லாமல் வாசித்தலை

குறிப்புகள்

படித்தல் என்று கூற முடியாது. "குட் மேன்" கருத்துப்படி, "படித்தல் என்பது மன மொழியியல் யூகம்"

வாசிக்கும் போது அதன் பொருளை யூகித்து படித்தல் அவசியம். இது இருட்டில் வேட்டையாடுவது போன்றது அல்ல. இருக்கின்ற தகவல்களை அடிப்படையாக வைத்துக் கணித்தல் வேண்டும். தகவல் அடிப்படையிலான யூகமானது இருக்கின்ற செய்திகளை நல்ல முறையில் பயன்படுத்த முடிகிறது. நம்முடைய யூகித்தலின் நிலையற்ற தன்மை மிக குறைந்த அளவு இருக்கம் வரை யூகித்தலை தொடர வேண்டும். மிக குறுகிய செய்திகளை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். அறிமுகமில்லாத கடினமான சிக்கலான நாவல்கள், தொழில்நுட்பக் கட்டுரைகள் அல்லது அந்நிய மொழிகள் ஏதேனும் வாசிக்கும்போது வார்த்தையாக மொழியெர்ப்பது கடினம். நாம், அதை மெதுவாக நிறுத்தி வாசிக்கலாம் என்று நினைக்க கூடும். இந்தச் சூழலில் வேகமாக வாசிப்பது தான் சிறந்த உத்தியாகும். ஒரு வாக்கியத்தில் தெரியாத வார்த்தையின் அர்த்தத்தை அதில் மீதமுள்ள வார்ததைகளின் அர்த்தத்தை உணர்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

- **வார்த்தை வாரியாக படிப்பதின் முக்கியத்துவம்**

ஒரு வாக்கியத்தில் ஒவ்வொரு வார்த்தையாக புரிந்துகெள்ளவது கடினம் எனவே, இந்த முறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஓர் எழுத்து ஒரு வார்த்தையில் வந்தாலோ அல்லது ஒரு வார்த்தை பொருளுள்ள ஒரு வாக்கியத்தில் வந்தாலோ எளிதாக புரிந்துகொள்ள முடியும் வாசித்தலின் போது வார்த்தைகளை அடையாளம் காணுதல் முக்கியமானது அன்று. ஒரு வார்த்தையை ஒரு வாக்கியத்தை வாக்கியத்தோடு சேர்த்து பொருள் உணர்ந்து கொள்வதை விட அதிகமான மற்றும் தெளிவான குறிப்புகள் தேவைப்படுகிறது. நாம் கண்ணால் பார்க்கக் கூடிய அடையாளங்களை உள்வாங்கி நினைவில் வைத்து கொள்ளும் திறமை நமக்கு குறிப்பிட்ட அளவே உள்ளது. எனவே வாசிப்பதற்கு மிக அதிகமான செய்திகள் தேவைப்படுகிறது. வாசித்தலைக் கற்றுக்கொள்வதில் மிக முக்கியமானது என்னவென்றால் ஒரு வாக்கியத்தை வாசிப்பதற்கு மிகக் குறைந்த அளவு அறிந்த கருத்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

சரளமாக வாசிப்பவர்கள் வார்த்தைக்கு முக்கியத்துவம் தருவதைவிட கருத்துக்கு முக்கியத்துவம் தருவார்கள். குழந்தைகளுக்கு இது உறுதியாகத் தெரியும். ஏனென்றால் தனித்தனியாக வார்த்தைகளை வாசிப்பது ஒருவிதமான அழுத்தத்தைத் தரும் என்பது அறிந்ததே.

குறிப்புகள்

- **துல்லியமாக மற்றும் சரியாக வாசிப்பது என்பது அவசியமான ஒன்றாகும்.**

தவறில்லாமல் கற்பது எவராலும் முடியாது. தவறு வருவது இயல்பானது என்பது புரிந்து கொள்ளாத வரையில் மிருகங்கள், செடிகள், மரங்கள் ஆகியவற்றின் பெயர்கள் மற்றும் எழுத்துக்கள், வார்த்தைகள் ஆகியவற்றைக் கற்க இயலாது. குழந்தைகள் தவறுகள் வரும் என பயந்து வாசிப்பதில் முயற்சி எடுக்க மாட்டார். இது மிகப்பெரிய தடையாகும். வாசிப்பதில் குழந்தைகள் தவறு செய்வது இயற்கையானது மற்றும் வாசிக்க கற்றலில் முக்கியமான பகுதியாகும்.

கற்கப்போவது என்னவென்பதை குழந்தை முன்பே தெரிந்திருந்தால் குழந்தை தான் செய்வது சரி என எண்ணி முயற்சி செய்யும். இதில் குழந்தை எதுவும் கற்றுக்கொள்ளாது. இதற்கு மாறாக குழந்தை ஏதேனும் பொருளின் பெயர் அல்லது வார்த்தையின் பொருள் கற்கும் போது இதில் தவறு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என எண்ணும்போது இதில் ஏதோ கற்றுக்கொள்கிறது, அவன் அவனுடைய கருதுகோளை சரிபார்க்கும்போது அது சரியாக இருந்தால் அதனை சரியென உறுதிப்படுத்துவான் தவறாக இருந்தால் தேவையான செய்தியை எடுத்து மாற்றம் செய்வர்

- **தவறுகளை உடனுக்குடன் சுட்டிக்காட்டுதல்**

ஒரு குறிப்பிட்ட வார்த்தையை வாசிக்கும் போது அதில் ஏற்படுகிற தவறினை சுட்டிக்காட்டுவது ஆசிரியருக்கு எளிதானது ஆகும். இது குழந்தைக்கு உதவி செய்வதாக ஆகாது. அவர் வார்த்தையை அடையாளம் காண்பதற்காக வாசிக்கவில்லை. பொருளை உணர்ந்து கொள்வதற்காகவே படிக்கிறான். குழந்தை வார்த்தையை அடையாளம் காண்பதற்கு பயிற்சி செய்யும் போது குழந்தை தான் சரியாக அடையாளம் கண்டிருக்கிறேனா என அறிய முற்பட்டால் உடனடி பின்னூட்டம் உதவியாக இருக்கும். ஆனால் குழந்தை பொருளுக்காக வாசிக்கும்போது வார்த்தை உச்சரிப்பு தவறானது எனக் கூறுவது தீமையை விளைவிக்கும். வாசித்தலை எப்போதும் சரிபார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இது காண்பிக்கிறது. வார்த்தைகளை உச்சரித்தல் மற்றும் பொருளுணர்ந்து கற்கும்போது நம்முடைய தவறுகளை நாமே ஆய்வு செய்ய வேண்டும்.

- **குழந்தைகளை சுயமாக வாசிக்க ஊக்குவித்தல்**

எவரும் கற்பிக்காமலேயே குழந்தைகள் வாசிப்பதில் சில கண்ணோட்டங்களை தெரிந்துவைத்திருப்பர். இவற்றில் பல

குறிப்புகள்

ஆசிரியர்க்கும் பெற்றோருக்கும் தெரியாதவையாகவும் இருக்கும். உதாரணமாக ஔவையார் என்ற வார்த்தையை ஔ என்ற எழுத்தின் உச்சரிப்பை ஆசிரியரால் மட்டுமே கற்பித்துக் கொடுக்க முடியும். மாணவர்களாக படித்தால் ஔ என்ற எழுத்தை பிரித்து ஒ ள என்று தவறாக படிக்க வாய்ப்பு உண்டு. எனவே படிக்கும் திறனை மேம்படுத்த மாதிரி படித்தல் அவசியமாகிறது. ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு எழுத்தின் உச்சரிப்பு வேறுபடும். எனவே குழந்தைகள் தானாக படிப்பதை தவிர்த்து ஆசிரியரின் மேற்பார்வையில் படித்தல் நல்லது.

குழந்தைகளால் எல்லா கடினமான எழுத்து விதிகளையும் அடையாளம் கொள்ள முடிகிறது என பாராட்டும் பொழுது நாம் கற்பிக்கும் முறைகளை மாற்றம் செய்துகொள்ள முடிகிறது. உண்மைத் தன்மை, நுட்பம் மற்றும் தவறுகளை சரிசெய்வதற்குப் பதிலாக ஆர்வமிக்க மற்றும் சவாலான செயல்பாடுகளைக் கொடுத்தல்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 3**

1. படிப்பதை கற்றுக்கொள்வதற்கு இயற்கையான மற்றும் தேவையான படிகள் யாவை?

   அ) படித்தலின் போது ஏற்படும் தவறுகள்

   ஆ) தவறு செய்யாமை

   இ) எழுத்துகளை புரியாமல் மனப்பாடம் செய்தல்

   ஈ) வார்த்தைகளை புரியாமல் மனப்பாடம் செய்தல்

2. படிக்கும் போது குழந்தைகள் செய்யும் தவறுகளை உடனடியாக சரிசெய்வது பயன் உள்ளதாக இருக்காது. எவ்வாறு?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. படித்தலுக்கான கற்பித்தலை விதிமுறைகளை மனப்பாடம் செய்வதன் மூலம் ஏற்படுத்த முடியாது? ஏன்?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

4. படித்தலுக்கான கற்பித்தல் வழிமுறைகள் யாவை?

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

5. தற்போதுள்ள படித்தலுக்கான கற்பித்தலிலுள்ள வரம்புகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

6. குழந்தைகள் தாங்களாகவே பல விவரங்களை கற்கிறார்கள் என்பது உண்மை என்பதை நிருபிக்க.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## 5.4.2.படித்தலுக்கான கற்றல் திறன்களை செயல்படுத்துதல்

குழந்தைகளுக்கு கற்பிக்கும் பொழுது எப்படிப் படிக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். முதலாவதாகக் கொடுக்கப்படும் பாடப்பொருள் அர்த்தமுள்ளதாகவும், குழந்தைகளின் வளர்ச்சி நிலைகளுக்கு ஏற்ற வகையிலும் அமைதல் வேண்டும். இரண்டாவதாக பாடப்பொருளின் மொழி குழந்தை அறிந்த மொழியில் இருத்தல் அவசியம். மூன்றாவதாக குழந்தைகள் படிப்பிற்கேற்ற சந்தர்ப்பங்களை வழங்குதல் வேண்டும். பாடப்பொருளை படிக்கும்பொழுது எந்த தடையும் (வார்த்தை, எழுத்து, ஒலி வேறுபாடு) இருக்கக் கூடாது. (வார்த்தைகளை பிரித்து கற்பது நல்ல கற்றலாகாது) படித்தல் என்பது அனுபவிக்கும்படியான பொழுது போக்காக இருக்க வேண்டும்.

- **பாடப்பொருளானது பயனுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் மற்றும் படிப்பவர்க்கு சவால்விடும் வகையிலும் அமைய வேண்டும்.**

புதியனவற்றைப் படிக்கும்போது ஏதாவது நோக்கம் இருக்க வேண்டும். உதாரணமாக நகைச்சுவைகளை படித்தல், ஆர்வமுடன் படித்தல், கதைகளின்

குறிப்புகள்

நிகழ்ச்சிகளை வரிசையாய் படித்தல், கதையின் முடிவவை தெரிந்து கொள்ளுதல்., பாடபொருளில் இவையாவும் முழுமையாய் இடம் பெற்றிருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். பாடப் பொருள் சவால்விடும் வகையில் இருப்பின், மாணவர்கள் அதை தமக்கான சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். என்ன சவால் என்பதை கண்டறிந்தவுடன் மாணவர்கள் அதை ஊக்கமாக எடுத்துக் கொள்வர். இது போன்ற சவால்கள் நிறைந்த வகுப்பறையே சிறந்த வகுப்பறையாகும். இது போன்ற பாடப்பொருள்களே மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதாக அமையும்.

- **சூழ்நிலையில் படித்தல் பொருள்கள்**

மாணவர்கள் மொழியை சூழ்நிலைக்கேற்ப புரிந்து கொள்கின்றனர். கதைகளும், பாடல்களும் பயனுள்ள சூழ்நிலையை உருவாக்குகின்றன. ஆசிரியர்கள் பாதி கதையை கூறி முடித்தபின் அதன் தொடர்ச்சியை மாணவர்களை கூறச் சொல்லலாம். கருத்துகள் யாவும் கதையோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மாணவர்கள் ஒரு கதையை தானே முயன்று பெற முடியும். கதையின் சூழ்நிலை தெளிவாய் அமைதல் அவசியமாகும். அக்ககதையில் வரும் கதைமாந்தர் போல் தன்னை கற்பனை செய்து கொள்ளவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. குழந்தைகள் கதைமாந்தர்களைக் கொண்டே படிக்கிறார்கள். உதாரணமாக கதைமாந்தர்களைப் போல நடித்தல், ஒலி எழுப்புதல் போன்றவை இவையாவும் முயல் குதிப்பதைப் போல, குதிரை உதைப்பதைப் போல, சேவல் கூவுவதைப் போலவாகும். இந்த மாதிரியான சூழல்கள் யாவும் படித்தலில் அவசியமாகிறது.

- **தெரிந்த வாக்கிய அமைப்பை பயன்படுத்துதல்**

குழந்தைகள் படிக்கும்போது மொழி நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். மொழியே பாடங்களை எளிமையானதாகவும், எப்படி படிக்க வேண்டும் என்பதையும் புரிய வைக்கிறது. இதுவே பாடப்பொருளை படிப்பதற்கும், புரிந்துகொள்ளவும் அவசியமாகிறது. உதாரணமாக குழந்தைகள் வீட்டிலோ, வெளியிலோ படிக்கும் பாடங்கள் வகுப்பறையிலும் பயன்படுகிறது.

## 5.4.2. படித்தலுக்கான இடம்

குழந்தைகள் வகுப்பறையில் படிப்பதற்கான இட அமைவை தேர்ந்தெடுத்தல் அவசியமாகும். மாணவர்கள் அதிக ஒலி எழுப்பி படிக்க இது உதவுகிறது. கதைகளை ஆர்வமுடன் கவனிக்கும் பொழுது படிப்பதும்

குறிப்புகள்

அவசியமாகிறது. சிறந்த கதைகளை படிக்கும் பொழுது அதிலுள்ள நிகழ்வுகள், வாக்கிய அமைப்பு முதலியவற்றை மாணவர்கள் அறிந்திருக்கிறார்கள் அவையாவும் படிப்படியாக உதவுகின்றன. மாணவர்களின் படிப்பை ஆர்வமாக்க தரமான பாடநூல்களை வழங்கலாம்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 4**

1. படித்தலைக் கற்பிப்பதற்கான தூண்டுதல் யாவை? அதற்கான காரணம் கூறுக.

   அ) விலை மதிப்புள்ள புத்தகங்கள்

   ஆ) படித்தலுக்கான கற்றல் பொருள்கள்

   இ) தெரிந்த வாக்கிய அமைப்பை பயன்படுத்துதல்

   ஈ) கற்றலுக்கான ஏராளமான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

2. படிப்பதற்காக கற்றலில் பாடப்பொருளுக்கான முக்கியத்துவம் யாவை?

   ...........................................................................................................

   ...........................................................................................................

   ...........................................................................................................

3. வகுப்பறையில் வாசிக்கும மையம் என்றால் என்ன? அதை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்.

   ...........................................................................................................

   ...........................................................................................................

   ...........................................................................................................

## 5.4.3. படித்தலைக் கற்பிப்பதற்கு நாம் செய்ய வேண்டுவன.

இப்பகுதியில் படித்தலைக் கற்பித்தலின் நுட்பங்களை ஆர்வமாகவும், பயனுள்ளதாகவும் இருப்பின் புதிய நுட்பங்களைத் தேட வேண்டியதில்லை.

- **புத்தகத்துடன் தொடங்குதல்**

படித்தலில் பாடநூல்களைப் படித்தலே இன்றியமையாத நோக்கமாகும். வரைபடங்கள் மற்றும் துணைக் கருவிகள் எப்பொழுதாவது பயன்படுத்த வேண்டும். பாடநூல்களின் வகைகளையும், பயன்களையும் மாணவர்கள்

குறிப்புகள்

அறிதல் வேண்டும். பாடநூல்கள் பயனுள்ள கதைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். கதைகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், அச்சிடப்பட்டிருக்க வேண்டும். கதைகளைத் தவிர பாடல்களும் அதில் இடம் பெறலாம்.

- **குழந்தைகள் பாடப்புத்தகத்தை சத்தமாகப் படித்தல்**

அதிக ஒலி எழுப்பி படிக்கும் பொழுது மாணவர்கள் தம் அருகிலேயே இருப்பதைப் போல உணர்வர். வகுப்பறையில் உள்ள மற்ற மாணவர்களுக்கு வேறு ஆர்வமான செயலைச் செய்ய ஊக்கமளிக்க வேண்டும். மாணவர்கள் பாடநூலின் பக்கங்களை பார்க்கும் வண்ணம் ஆசிரியர் படிக்க வேண்டும். படிக்கும் பொழுது கற்றல் உபகரணங்களை தம் அருகில் வைத்துக்கொள்ள வேண்டும். சில பாடங்கள் விரிவாக இருக்கும். ஆசிரியர் அவற்றை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் சுருக்கி கொடுக்கலாம். பாடங்களை முழுமையாக விளக்கிக் கூறாமல் சிறு சிறு பகுதிகளாக கற்பிக்கலாம். ஆசிரியர் பாடப்புத்தகத்தில் உள்ளவைகளை விட கூடுதலாகவும் கற்பிக்கலாம்.

- **பாடலை ஒப்புவித்தல்**

திறன்களை வளர்த்தலே முதன்மையானது. பாடல்கள் இவற்றில் முக்கிய பங்காற்றுகிறது. குழந்தைகள் பாடல்களை மீண்டும் மீண்டும் கேட்பதால் அந்த மொழிநடையைப் புரிந்துகொள்ள வாய்ப்பு கிடைக்கிறது. பாடல்களை நினைவில் கொள்வது குழந்தைகளுக்கு எளிதாகிறது. பாடல்களை சிலமுறை கேட்டவுடனே அவைகளை மனதில் பதிகின்றன. குழந்தைகள் இதைப்போன்ற பல பாடல்களை கேட்க எதிர்பார்க்கின்றனர். ஆசிரியர்கள் இதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

நீதிக்கதைகளை சொல்லும் பாடல்களை தவிர்த்து விடலாம். விளையாட்டு மூலம் கற்கும் பாடல்களை ஊக்கமளிக்கலாம். அவை நாட்டுப்புறப் பாடல்களாக இருக்கலாம். இப்பாடல்கள் யாவும் சிறு புத்தகங்களாக அச்சிடலாம். இது போன்ற பாடல்களை ஆசிரியர் தயார் செய்தல் வேண்டும். இதைப்போலவே மற்ற பாடங்களிலுள்ள பாடல்களையும் படித்தல் வேண்டும். பாடல்களை படித்தவுடன் அதைப் பாடவும் கற்றுக் கொடுக்கலாம். தரமான பாடல்கள் என்றென்றும் குழந்தைகள் மனதில் நிலைத்திருக்கும்.

எடுத்துக்காட்டாக, சில பாடல்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது. இதனை வகுப்பறையில் உபயோகப்படுத்தலாம். ஆசிரியர்கள் இப்பாடல்கள் மட்டுமல்லாமல் அவர்களுக்கு தெரிந்த வேறு பாடல்கள் மூலமாகவும் பல வழிகளில் படித்தலை கற்றுக்கொடுக்கலாம்.

குறிப்புகள்

### ஆட்டுக்குட்டி

ஆட்டுக்குட்டி என்னை நீ
அழைப்பதெங்னே கூறுவாய்?
ஓட்டம் ஓட்ட மாகவே
ஓடி வரவா சொல்கிறாய்?
புல் இருக்கும் பக்கமே
போகத் தானே அழைக்கிறாய்?
புல்லால் எனது பசியினைப்
போக்கி கொள்ள முடியுமோர்
அமமா தோசை தின்னவே
என்னை அழைக்க நான் போகிறேன்
சும்மா இங்கு நிற்பதேன்
சொன்னேன் ஓடிச் செல்லுவாய்,

### சின்னச் சின்னப் பறவை

கூட்டை நாங்கள் கலைக்க மாட்டோம் சிட்டுக்குருவி
குஞ்சுகளைத் தொடவும் மாட்டோம் சிட்டுக்குருவி
சேட்டையொன்றும் செய்ய மாட்டோம் சிட்டுக்குருவி
திண்ணம் இது திண்ணமாகும் சிட்டுக்குருவி

ஒரு குழந்தை பாடல்களை அனுபவித்து படிக்கும்போது அவனால் அவனுக்கு தெரிந்த வார்த்தையை வைத்து அவன் படித்தது போன்ற பாடல்களை உருவாக்குகிறான். மேலும் அவன் பாடல்களை மொழிபெயர்ப்பு செய்யவும் முயல்கிறான்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 5**

1. கீழ்வருவனவற்று வாசிக்கக் கற்றுக்கொடுப்பதற்கு மேலானது எது?

   அ) மின் அட்டடை ஆ) விளக்கப்படம்

   இ) மரத்திலான எழுத்துக்கள் ஈ) புத்தகங்கள்

2. மரபுவழியில் எவ்வாறு வாசிப்பது எனக் கற்றுக்கொடுப்பதைவிட வாசிப்பதற்கு உதவக்கூடிய பிற வழிமுறைகள் யாவை?

   ..................................................................................................................

   ..................................................................................................................

   ..................................................................................................................

3. கவிதை வழியாக வாசிக்கக் கற்றுக்கொடுப்பது எவ்வாறு எளிதானது?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................



குறிப்புகள்

## 5.4.4. செயல்பாடுகள்

குழந்தைகள் மொழிகளின் எழுத்துத் தொகுதிகளை மிகவும் ஆர்வமுடன் பயில்கிறார்கள். அதைப் போலவே மொழிகளின் ஒலியை உலகின் பிற மொழிகளின் ஒலியோடு சேர்த்துக் கற்றுக்கொள்ள வேண்டும். இவற்றை சில செல்பாடுகள் மூலம் வளர்க்கலாம் உதாரணமாக எழுத்துத் தொகுதிகளை கதைகள் மற்றும் பாடல்களோடு தொடர்புபடுத்தி கற்பிக்கலாம். மாணவர்களைப் பாடச் செய்து அதன் மூலம் பல்வேறு வகையான ஒலிகளை வேறுபடுத்திக் காட்டலாம். அவற்றிலிருந்து எழுத்துக்களை வேறுபடுத்திக் காட்டச் சொல்லலாம். அந்த எழுத்துக்களின் துணை கொண்டு வேறு சில புதிய வார்த்தைகளை எழுதச் செய்தல் வேண்டும். வார்த்தைகளிலிருந்து எழுத்துக்களை கண்டுபிடிக்கவும் பயிற்சியளிக்க வேண்டும். வேறு சில புதிய வார்த்தைகளை எழுதி அதிலுள்ள எழுத்துகளை மாணவர்கள் கண்டறியப் பயிற்சி அளிக்க வேண்டும். இது இன்றியமையாதது ஏனெனில் ரோமானிய எழுத்துத் தொகுதிகளின் ஒலி மற்றும் எழுத்துக்கள் மற்ற எழுத்துக்களின் உச்சரிப்போடு ஒத்துப்போகாது. இதிலுள்ள விதிகளை மாணவர்களுக்கு விளக்கமாக கற்றுத் தருதல் அவசியமாகும். இவற்றை ஹிந்தி போன்ற மொழிகளிலும் பயன்படுத்தலாம்.

- **படித்ததை செயல்படுத்துதல்**

ஒரு செயலை செய்தல் மற்றும் படித்தல் இரண்டிலும் ஓர் ஒற்றுமை உண்டு என்பதை மாணவர்களிடம் புரிய வைக்க வேண்டும். இந்த செயல்பாடுகளில் ஆசிரியர் கரும்பலகைகள் அருகில் நிற்க வேண்டும். ஆசிரியர் பேசுவதற்குப் பதிலாக கரும்பலகையில் சில பயிற்சிகளை எழுத வேண்டும். இதில் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் ஒரு வரிசை எண் கொடுத்து கரும்பலகையில் அவ்வரிசை எண்ணுடன் பயிற்சியையும் சேர்த்து எழுத வேண்டும். பயிற்சி என்னவென்றால் எழுந்திரு, வெளியே செல், கல்லைக் கொண்டு வா, என்று கரும்பலகையில் எழுதி வரிசை எண்.10 என அழைக்க வேண்டும். வரிசை எண்.10 உள்ள குழந்தை எழுந்து வெளியே சென்று கல்லை கொண்டுவருதல். இதுபோன்று வரிசை எண்.8 உள்ள குழந்தைக்கு கொடுக்க



குறிப்புகள்

வேண்டும். இவ்வாறு எளிதான பயிற்சியிலிருந்து கடினமான பயிற்சிக்குச் செல்ல வேண்டும். சுவரொட்டியில் உள்ள படங்களை பார்த்துப் படித்தல் அல்லது மருத்துவமனைக்குச் செல்ல வழி காட்டுதல் மற்றும் பள்ளி வளாகத்தில் காணும் மரங்களை எண்ணுதல் போன்ற பயிற்சியை கொடுக்கலாம்.

- **வார்த்தைக்கு முன், வார்த்தைக்குப் பின்**

இந்த செயல்பாட்டிற்கு நிறைய பாடப்புத்தகங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். மாணவர்களுக்கு அப்பாடநூல்களைக் கொடுக்க வேண்டும். இதனால் ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு பாடப்புத்தகம் கிடைக்கப்பெற்று அவனால் எளிதாக படிக்க முடியும். அவனை ஏதாவது ஒரு பக்கத்தை திறக்கச் சொல்ல வேண்டும். அவன் திறக்கும் பக்கத்தில் கீழே கடைசி வரியில் முற்றுப் புள்ளி இருப்பின் வேறு ஒரு பக்கத்தை திறக்க சொல்ல வேண்டும். அந்தப் பக்கத்தில் கடைசி வரியில் முற்றுப் புள்ளி இல்லையெனில் அவனை மௌனமாகப் படிக்கச் சொல்ல வேண்டும். அப்பக்கத்தின் கடைசி வார்த்தை வரை படிக்கச் சொல்லி அடுத்த பக்கத்தின் முதல் வார்த்தை என்னவாக இருக்கும் என்று வினா எழுப்ப வேண்டும். மாணவர்களின் பல்வேறு பதிலுக்குப் பிறகு அவனை அடுத்த பக்கத்தை திறக்க வைத்து விடையைச் சரிபார்க்க வேண்டும். அதே போன்ற செயல்முறையை ஒவ்வொரு மாணவனும் செய்து பார்க்க வாய்ப்பளிக்க வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 6**

1. படித்தலுக்கான கற்பித்தலில் இரண்டு புதுமையான செயல்பாடுகளைக் கூறுக?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

2. படித்தலுக்கான கற்பித்தலில் செயல்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

## 5.5. படித்தல் மற்றும் எழுதுதல் திறனில் உள்ள தொடர்பு

படித்தல் எழுதுதல் ஆகிய இரண்டையும் இருவேறு திறன்களாக கருதுகிறோம். படித்தல் பாடக்கருத்துகளை உற்றுநோக்கும்போது முழுமையாக உள்வாங்க முடியும். தொடக்கநிலை பள்ளிகளில் உள்ள வகுப்புகளுக்கு இத்திறன் ஒன்றோடொன்று தொடர்புடையது. குழந்தைகளுக்கு முதலில் படித்தல் திறனையும், அடுத்து எழுதுதல் திறனையும் கற்றுத் தருகிறார்கள். வாசித்தலும், எழுதுதலும் இரண்டு கண்கள் போன்றவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையது. வாசித்தலில் பொருள் கொள்ள முடியாத பொழுது எழுதுதல் திறனும் பாதிக்கப்படும். வாசிக்கும் பொழுதே அதற்குரிய பொருளை அவனால் புரிந்து கொள்ள முடிகிறது. அதேபோல் அவன் எழுதியதைத் தொடர்ந்து மேம்படுத்தி கொண்டிருக்க வேண்டும். வாசித்தலிலும், எழுதுதலிலும் பொருளைக் கட்டமைக்க முடியும். ஒரு அம்மா, வாயு கொள்கலனை மாற்றும் தேதியை காலண்டரில் எழுதுகிறார். அதைக் குழந்தை முதலில் பார்க்கவில்லை. அடுத்து அவன் பார்க்கும் பொழுது வாசிக்கிறான். எடுத்துக்காட்டாக ஒரு செயல்பாட்டில் பல கருத்துக்களும், எண்ணங்களும், படித்தல் திறனும், எழுதுதல் திறனும் உள்ளடங்கியுள்ளது. அனைவரின் வீட்டிலும் இச்செயல்பாடு நடக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும் (செய்திகள் மற்றும் வார இதழ்கள் வாங்காத வீடுகளில் இச்செயல்பாடு நடக்கிறது) குழந்தை தன்னுடைய தாயார் நாட்காட்டியில் என்ன செய்தார் என்பதை புரிந்து கொண்டதின் விளைவாக அக்குழந்தை நாட்காட்டியை வேறுவிதமாகவும் உபயோகிக்கலாம் என்பதைப் புரிந்து கொள்கிறது. எடுத்துக்காட்டாக குழந்தை தாத்தா பாட்டியின் வருகையை அவர்கள் வருகை புரிந்த தேதியில் குறித்து வைத்து அவர்கள் இருவர்களின் முகங்களை தன்னுடைய உடன் பிறந்தவர்களுடன் சேர்ந்து வரைகிறது. பள்ளியில் சேர்வதற்கு முன்பே குழந்தை எழுத்து மொழி மற்றும் படித்தல், எழுதுதல் குறித்தான செயல்பாடுகளின் வெளிப்பாடுகள் தன்னைச் சுற்றிலும் நிகழும் நிகழ்வுகளில் இருந்து இயற்கையாகவே கற்றுக்கொள்கிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 7**

1. படித்தல் மற்றும் எழுதுதல் ஆகியவற்றை ஏன் இருவேறு திறன்களாகக் கருதுகிறோம்?

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

குறிப்புகள்

2. படித்தல் மற்றும் எழுதுதல் திறன்களில் உள்ள பொதுவான செல்பாடுகளாக எதைப் பார்க்கிறீர்கள்?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

## 5.6. தொகுப்புரை

படித்தல் ஒரு படைப்பாற்றல் கலை. அது கொடுக்கப்பட்டுள்ள பாடப்பொருளை சத்தமாக வாசிப்பது மட்டுமின்றி அதனுடைய பொருளையும் புரிந்துகொள்ளுதல். வாசிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள பாடப்பொருளை தனித்தனியாகப் பார்க்காமல் அதை முழுமையாக தெய்வீக பாடமாக பார்க்க வேண்டும். வாசிக்கும் திறனில் ஒருவரது யூகம் முக்கிய பங்கு வகுக்கிறது. குழந்தைகளுக்குத் தேவையான படித்தல் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதால் கற்றல் மகிழ்ச்சியுள்ளதாக அமைகிறது.

## 5.4. பார்வை நூல்கள்


1. பாண்டே, லதா (2008) பத்னி கி டேலிஜ் பார், புதுடில்லி, ழிசிஸிஜி
2. NCERT, 2008 பத்னி கி சம்ஜ், புதுடெல்லி ழிசிணிஸிஜி
3. ஜோசி, சுசில் (1989) பச்சி, பர்த கியோன் நகின் படே, ஸ்ரோடி, இக்லவ்ய


## 5.8. பயிற்சிகள்

1. படித்தலை கற்பித்தலில் உள்ள முக்கிய கருத்துக்கள் யாவை?
2. படித்தல் என்றால் என்ன? ஒரு குழந்தை படிக்கக் கற்றுக்கொண்டான் என்பதை எப்போது அறியலாம்?
3. படித்தலை கற்பித்தலில் கதைகளை பயன்படுத்துவதன் மூலம் குழந்தைகளிடம் படித்தல் திறனை மேம்படுத்த முடியுமா் முடியுமென்றால் அதனை எடுத்துக்காட்டுடன் விவரி.
4. படித்தலை மகிழ்ச்சியுடையதாக்க எடுக்கப்படும் முயற்சிகள் யாவை?
5. பாடப்புத்தகத்தை தவிர்த்து வேறு துணை பொருட்களை பயன்படுத்தி படித்தலை கற்பிக்க விரும்புகிறார்களா்

# அலகு 6

# எழுதுதல்

குறிப்புகள்

## அமைப்பு


6.0 அறிமுகம்

6.1 கற்றல் நோக்கங்கள்

6.2 எழுதுதல் என்பதன் பொருள்

6.3 எழுதுதலின் தொடக்கம்

6.3.1. கை இயக்கத்திறன்

6.3.2. எழுத்து, சொல், சொற்றொடர் இவற்றில் பயிற்சி

6.4 நல்ல கையெழுத்தின் கூறுகள்

6.4.1. தெளிவான மற்றும் அழகான கையெழுத்து

6.4.2. நல்ல கையெழுத்து உருவாக்க குழந்தைகளுக்கு உதவுதல்

6.4.3. கையெழுத்தும் ஆளுமையும்

6.4.4. கையெழுத்து எழுத்து பிறழ்வு (டிஸ்லெக்சியா) மற்றும் உடல் குறைபாடுக்கான ஓர் அறிகுறி

6.5 நல்ல கையெழுத்தின் பண்புகள்

6.5.1. இலக்கணப் பிழையில்லா மொழி

6.5.2. கற்போரை மனதில் இருத்தல்

6.5.3. எளிமை மற்றும் கவிநய மொழி

6.6 தொடக்க நிலை வகுப்புகளில் எழுதுதல் திறனை வளர்த்தல்

6.7 உயர்நிலை படைப்புகள்

6.8 தொகுப்புரை

6.9 பார்வை நூல்களும் மேற்கோள் குறிப்புகளும்

6.10 பயிற்சிகள்

குறிப்புகள்

## 6.0. அறிமுகம்

முந்தைய அலகில் நாம் கேட்டல் பேசுதல், படித்தல், வாசித்தல், ஆகிய மூன்று திறன்கள் பற்றியும் அவற்றிற்கிடையேயான தொடர்பைப் பற்றிப் படித்தோம். மொழித்திறன்களில் இறுதியாக எழுத்துதல் திறன் மாணவர்களிடையே வளர்க்கப்படுகிறது. இந்தத் திறன் மற்ற மூன்று திறன்களைச் சார்ந்துள்ளது. செய்தித் தொடர்பும், வெளிப்படுத்தும் திறனும் எழுதக் கற்போரிடத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த அலகில் குழந்தைகளிடையே நாம் செய்தித் தொடர்பு திறன் வளர்ச்சி, வெளிப்படுத்தும் திறன் வளர்ச்சி ஆகியவற்றைக் காண்போம். சிறப்பாக எழுத சில உயர் நிலை திறன்கள் வழங்கப்படுகிறது. எழுத்துத்திறன் வளர்ச்சியானது ஒரு முழுமையான மொழித்திறன் வளர்ச்சியாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் எழுதுதல் திறன் என்பது மற்ற மூன்று திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களை உள்ளடக்கி உள்ளது. எழுதுபவர் எழுதுவதை வாசிக்கிறார் அதை தனக்குள் பேசுகிறார் மற்றும் தானே கேட்கிறார். கற்பித்தல் குழந்தைகளுக்கு அர்த்தமுள்ள அனுபவமாக இருந்தால் சிறப்பானதாக அமையும். தொடக்க நிலையில் எழுத்துக்கள் மற்றும் இலக்கணம் கற்பித்தல் கற்றல் கொள்கையினை உள்ளடக்கி உள்ளது. மேலும் உயர்நிலைத் திறன்களை கற்பித்தலில் பல வகையான எழுதும் திறன்களை உள்ளடக்கி உள்ளது. இந்த அலகில் பிழை திருத்தம், அழகிய கையெழுத்து, கவிநயமொழி ஆகிய வகுப்பறை செயல்பாடுகளைப் பற்றி இங்கு காண்போம்.

## 6.1. கற்றல் நோக்கங்கள்

இந்த அலகின் முடிவில் மாணவர்கள்:

- எழுதும் திறன் என்றால் என்ன? என்றும் எழுதும் திறனுக்கும் கேட்டல், பேசுதல், படித்தல் ஆகிய மூன்று மொழித்திறன்களுக்கும் இடையிலான தொடர்புகளை புரிந்து கொள்கிறார்கள்
- அழகான கையெழுத்து என்ன என்பதை புரிந்து கொள்கிறார்கள்
- குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுப்பதில் ஆசிரியரின் பங்கு என்ன என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள்
- பல வகையான எழுத்துகளை கற்றுக் கொள்கிறார்கள்
- எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான வகுப்பறைச் செயல்பாடுகளை கற்றுக் கொள்கிறார்கள்.

குறிப்புகள்

## 6.2. எழுதுதல் என்பதன் பொருள்

எழுதக் கற்றுக்கொள்வது மொழிக் கற்றலில் ஒரு சிக்கலான செயல்பாடு. ஒரே நேரத்தில் பல திறன் செயல்பாடுகள் எழுதும் போது செயல்படுவதால் இது ஒரு கடினமான செயல்பாடாகக் கருதப்படுகிறது.

எழுதும் திறனை வளர்ப்பதற்கு முதன் முதலில் உடல் இயக்கத்திறனை குழந்தைகள் பெற்றுக்கொள்ள இருக்கின்றன. அப்போது தான் எழுதுகோலை திடமாக பிடித்து எழுத முடியும்.

இதன் பின்பு குழந்தையானது ஒலியின் வடிவங்களை கற்றுக் கொள்கிறது. அத்தோடு எழுத்து மூலம் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளும் மொழி திறனை பெற்றுக் கொள்கிறது.

## எழுதுதல்பொருள்

அகராதிகளின் படி எழுதுதல் என்பது ஒரு சமதளத்தில் வரையப்படும் வடிவங்கள் மற்றும் கோடுகளை இன்னொரு நபர் புரிந்து கொள்கிறார்கள். இந்த வரையறை தெளிவாக இருந்தாலும் எழுதும் திறனிலுள்ள பல நுணுக்கங்களை விட்டு விடுகிறது. குறிப்பாக மொழிக்கும் எழுதும் திறனுக்கும் இடையே உள்ள உறவை விட்டுவிடுகிறது. ஏன் என்றால் சமதளத்தில் வரையப்படும் ஓவியங்களும் மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படுகிறது. ஆனால் அதை நாம் எழுதுதல் என்று குறிப்பிடுவது கிடையாது. ஆகராதியின் வரையறை பேச்சுக்கும், எழுத்துக்கும் உள்ள தொடர்பை விட்டுவிடுகிறது.

மனித வரலாற்றில் மொழி எப்போது உருவானது என்று தெளிவாக இல்லை. பேசும் செயல்பாடும் எழுதும் செயல்பாடும் வெவ்வேறு சமயங்களில் தோன்றியுள்ளன. பேச்சுத் திறனை உருவாக்கும் உடல் உள்ளுறுப்புகள் 1.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றியிருக்கலாம். இதை பற்றி பல கருதுகோள்கள் உள்ளன. பேச்சு திறனானது தோராயமாக 1 மில்லியன் ஆண்டுகளுக்கு எழுதும் முன்பு திறனானது 5 ஆயிராயம் ஆண்டுகளுக்கு முன்தான் தோன்றியிருக்கும் எனக் கருதப்படுகிறது. மனித இனத்தின் எல்லா சமூகங்களிலும் பேச்சுக்கலையானது எழுத்துக்கலைக்கு மிகவும் முன்பே தோன்றியுள்ளது. இன்றளவில் கூட பல சமூகங்களில் மொழியானது பேச்சு வழக்கில் மட்டுமே உள்ளது. சமூகங்கள் அளவில் பெரிதாக உருவாகும் போது எழுதும் கலையானது உருவாகிறது. வேறுபட்ட சமூக உறுப்பினர்களுக்கு இடையிலான இடைவினை செயல்பட்டால் எழுதும் வழக்கமானது அதிகரித்துள்ளது. குறிப்பாக பொருள்கள் பண்டமாற்றுதல் › நிலக்குறிப்புகள் மற்றும் வியாபார குறிப்புகளுக்காக எழுதுகலையானது உருவாக்கப் பட்டுள்ளது.

குறிப்புகள்

எழுதுதலானது பேசுகின்ற சொற்களுக்கு வடிவம் கொடுக்கிறது. இவ்வாறு எழுதுதல் ஒரு புதிய மொழி கிடையாது மாறாக ஒரே மொழியின் மற்றொரு வெளிப்பாடு. மொழித்திறன்கள் பேசுதல்› எழுதுதல் ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு இருந்தாலும் எழுதுதல் பேசுதலை விட அதிக நிலையானது. பேசுதலானது ஒலி இருக்கும் வரை தான் உள்ளது. ஆனால் எழுதுதல் எழுதிய பொருள் உள்ளவரை நிலைத்து நிற்கிறது. இவ்வாறு பேசிய வார்த்தைகள் கண்ணுக்கு புலப்படாதவை மேலும் தற்காலிகமானது. ஆனால் எழுதிய வார்த்தைகள் கண்ணுக்கு புலப்படுதும் நிலையானதும் ஆகும். பேசும் பொழுது கேட்பவர் நம் கண் முன்பாகவே இருக்கிறார். பேசும் பொருளானது வார்த்தைகள் மற்றும் சைகைகளால் உருவாக்கப்படுகிறது. மேலும் குரல் வளம், குரல் ஏற்றத் தாழ்வினால் பேச்சானது மெருகூட்டப்படுகிறது. பேச்சினுடைய சூழ்நிலையானது உரையாடலுக்கு தொடர்புடையதாக இருக்கிறது. பேசும் வாக்கியங்கள் அதன் தொடர்புடைய எழுதும் வாக்கியங்களை விட வேறுபட்டிருக்கலாம்.

பேசும்பொழுது பிழை ஏற்படின் அதை உடனே திருத்திக் கொள்ளலாம். இவ்வாறு தவறான புரிதலை தவிர்த்து விடலாம். ஆனால் எழுத்து நடையில் இந்த வசதிகள் கிடையாது.

'கவிஞர் பிரேம்சன் கூறுகிறார் பேசியதினால் நாக்கு வெட்டப்படுவது கிடையாது. ஆனால் எழுதியதினால் கைகள் வெட்டப்பட்டன' ஆனால் எழுதும் போது திருத்திக் கொள்வதற்கு போதிய நேரம் கிடைக்கிறது. ஆனால் பேசும்போது கிடைப்பதில்லை. இவ்வாறு எழுதும் போது வாக்கியங்களை மேம்படுத்துவதற்கு போதிய நேரம் கிடைக்கிறது. ஆனால் பேசும் போது கிடைப்பதில்லை. ஆகவே எழுதுதல் பேசுவதை விட சிக்கலான திறனாகக் கருதப்படுகிறது.

அடுத்ததாக பேசும் மொழியானது தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது. ஆனால் எழுதும் மொழியானது மிக எளிதில் மாறுவது கிடையாது. உதாரணத்திற்கு தனிநபர் ஒருவர் உச்சரிப்பில் வேறுபாடு உள்ளது. அவர் சொல்லும் பொழுது வித்தியாசமாக இருக்கிறது. இதே போல் தமிழில் அலகு, அளகு, அழகு சொற்களை பயன்படுத்தி பேசப்படுகிறது. இதே போல் வார்த்தைகள் எழுதி பேச கற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கு இது ஒரு முக்கியமான நிலையாகும். தொடக்கத்தில் எழுதும் போது பேசுகின்ற வார்த்தைகள் பற்றி சொல்லப்படுகிறது. பேசுகின்ற ஒலியானது ஏற்றுக்கொள்ளப்பட்ட எழுத்து வடிவத்தோடு ஒத்துப்போகவில்லையென்றால் குழந்தை தவறு செய்வதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. இத்தவறுகள் கற்றல் வழிமுறையில் வெளிப்படுகிறது.

குறிப்புகள்

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 1**

1. எழுதுதல் ஒரு வழி

   (அ) ஒரு புதுமொழியை உருவாக்கம் செய்கிறது

   (ஆ) அதே மொழியை இன்னொரு வழியில் உருவாக்கம் செய்கிறது

   (இ) எழுதக் கற்றுக் கொடுக்கிறது

   (ஈ) வாசிக்க கற்றுக் கொடுக்கிறது

2. ஒரு மனிதன் எழுதுவதற்கு என்னென்ன திறன்கள் தேவை?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. எழுதுதல் மற்றும் பேசுதல் இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை எழுதுக? அது அதிக மாற்றத்துக்கு உட்பட்டதா்

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

4. யாரையாவது ஒரு பத்தியை வாசிக்கச் சொல்லுக பத்தியில் புரிந்து கொண்டதை எழுதச்சொல், எழுதும்போது ஏற்பட்ட தவறுகள் மற்றும் சிரமங்களை ஆய்வு செய்க.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

## 6.3. எழுதுதலின் தொடக்கம்

### 6.3.1. கை இயக்கத்திறன்

ஒரு குழந்தை எழுத தொடங்குவதற்கு முன் அதனுடைய உடல் இயக்க வளர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த திறன்களை வளர்ப்பதற்கு

குறிப்புகள்

குழந்தைகளுக்கு போதுமான பொருள்கள் கொடுக்கப்படவேண்டும். குழந்தைகள் திடமான பொருள்களை பிடிப்பது, திருகுவது, புரட்டுவது பற்றிப்பிடிப்பது ஆகிய செயல்பாடுகளால் இயக்கத் திறனை வளர்த்துக் கொள்கின்றன மற்றும் ஒரு மன மகிழ் செயல்பாடு ஓவியம் வரையலாம். இந்த திறனும் எழுதுதல் திறனை மேம்படுத்த உதவுகிறது. ஆகவே மாணவர்கள் ஓவியம் வரைவதை ஊக்கப்படுத்த வேண்டும். தொடக்க நிலையில் மாணவர்களுடைய ஓவியங்கள் அர்த்தமற்ற கிறுக்கல்கள் போன்று தோன்றும். இந்த கிறுக்கல்களிலிருந்து வடிவங்களும், புள்ளிகளும் தோன்றுகிறது. ஓவியம் வரைதலை தவிர சில விளையாட்டுகளும் குறிப்பாக தண்ணீர் எடுத்து ஊற்றுவது, மணிகளை இடம் நகர்த்துதல், பூக்களை அடுக்குதல், களிமண் பொம்மைகள் செய்தல் போன்ற செயல்பாடுகளும் உடல் இயக்கத் திறன் வளர்ச்சிக்கு உதவுகிறது. மாணவருடைய வீட்டு சூழல் இத்தகைய வாய்ப்புகளை அவனுக்கு உருவாக்கிக் கொடுக்கிறது. இருப்பினும் எல்லா நேரங்களிலும் இந்த வாய்ப்புகள் கிடைக்கும் என்பது உறுதியற்றது. ஆகவே ஆசிரியர்கள் இத்தகைய செயல்பாடுகளை உருவாக்கிக் கொடுப்பது அவசியமாகும்.

## 6.3.2. எழுத்து, சொல், சொற்றொடர் இவற்றில் பயிற்சி

எழுத்துக்களையும், வார்த்தைகளையும் மீண்டும் மீண்டும் எழுதிப் பழகும் போது வாக்கியம் அமைத்தல் திறன் வளர்க்கப்படுகிறது. இது உண்மையாக இருந்த போதிலும் மாணவர்கள் சோர்வு அடையும் வரை வார்த்தை எழுத்துக்களை எழுதும் பயிற்சி மீண்டும் மீண்டும் கொடுக்கப்பட்டால் அவர்கள் எழுதத் தொடங்குவதற்கு முன்பே துவண்டு விடலாம். ஆகவே தனி எழுத்துகளும், தொடர் எழுத்துக்களும் முதலில் அறிமுகப்படுத்தப் படவேண்டும். அறிமுகப்படுத்தப்பட வேண்டிய எழுத்துக்களும் வார்த்தைகளும் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது.

குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுக்கும்போது அவர்களுடைய திறமைகளையும் கற்றலுக்குரிய சூழலையும் கண்டிப்பாக மனதில் வைக்கவேண்டும். குழந்தைகளுடைய உள்ளார்ந்த ஆற்றலைப் பாராட்ட வேண்டும். குழந்தைகள் அவர்களுடைய தாய்மொழியை இயற்கையாக கற்றுக் கொள்கின்றன. அதே போல் எழுதுவதற்கு தேவையான விதிகளை எழுதிய பொருள்களிலிருந்து கற்றுக் கொள்கின்றனர். கற்றலில் இந்த விதிகள் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் அல்லது அவர்களுக்கு புரியாமல் இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன என்று ஆசிரியர்கள் நினைக்கக் கூடாது. அது உண்மையும் கிடையாது. இப்படிப்பட்ட மன அமைப்பை நம்மிடமிருந்து அகற்றி மாணவர்களுடைய அறிவுக்கும், ஆற்றலுக்கும் மதிப்பளிக்க வேண்டும். பள்ளிக்கு வரும் முன்பே மாணவர்களுக்கு

குறிப்புகள்

தனிப்பட்ட எழுதும் திறன் உள்ளது. மாணவர்கள் வீட்டுச்சுவரில் ஓவியங்கள் வரைதல், தரையில் கிறுக்குதல், காகிதத்தில் எழுதுதல் போன்ற திறன்களைக் கொண்டிருப்பது சாதாரணமானது.

அவர்களுக்கு இந்த கிறுக்கல்கள் அர்த்தமுள்ளவையாகும். இந்த தனிப்பட்ட கிருக்கல்கள் மூலம் அவர்கள் விருப்பத்தை வெளிப்படுத்துகின்றன. மாணவர்கள் அவர்களுடைய திறன்களை முழுமையாக வெளிப்படுத்தும் அளவி;ற்கு வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். அவர்களுடைய கற்றல் வழிமுறையானது தகவல்களை ஒருங்கிணைத்து செய்திகளை முழுமையாக்குவது கிடையாது.

முதலில் முழுமையான கருத்துக் கொடுக்கப்படுகிறது. பின்பு அது தனிப்பட்ட கருத்துக்களாக மாற்றப்படுகிறது. ஒரு அர்த்தமுள்ள முழுமை கொடுக்கப்படாவினில் தனி எழுத்துகளும்› எழுத்து தொடர்களும் அர்த்தமற்றதாகி விடும். இந்த செயல்பாடானது மெதுவாக மாணவர்களுடைய எழுதுதல் தொடர்பான மனநிலையை மாற்றி வெறுப்பை உண்டாக்கிவிடும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 2**

1. கற்றல் செயல்பாடுகள் எவ்வாறு நடைபெறுகிறது?

   (அ) தனி எழுத்துக்களை அளித்து அதை முழுமைப்பெறச்செய்தல்

   (ஆ) முழுமையான படத்தை அளித்து தனிக்கூறுகளை அறிதல்

   (இ) மனப்பாடம் செய்தல்

   (ஈ) ஓவியம் வரைதல்

2. பள்ளிக்கு செல்லும் முன் குழந்தைகள் வரையும் ஓவியங்கள் கிறுக்கும் குறியீடுகள் அவர்களை பற்றி என்ன கூறுகிறது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. உடல் இயக்கத்திறன் என்றால் என்ன? அவை எவ்வாறு வளர்க்கப்படுகிறது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

4. மீண்டும் மீண்டும் தமிழ் எழுத்துப்பயிற்சி அளித்து எழுதுதிறனை கற்றுக் கொடுப்பதிலுள்ள இடர்பாடுகள் யாவை?

.................................................................................................

.................................................................................................

.................................................................................................

## 6.4. நல்ல கையெழுத்தின் கூறுகள்

நாம் குழந்தைகள் எழுதக் கற்கும் முன்பே எழுத்துகள் தரமானதாக இருக்க வேண்டும் என எண்ணுகிறோம். தெளிவாக எழுதுதல் முக்கியம் என்றால் அர்த்தமுள்ளதாக எழுதுவது அதைவிட முக்கியமானது. குழந்தை எழுத்துகளை அழகாக பிரதியெடுக்கலாம் ஆனால் எழுதுவது புரியும்படியாக இருக்க வேண்டும்.

### 6.4.1. தெளிவான மற்றும் அழகான கையெழுத்து

தொடக்க வகுப்புகளில் ஆசிரியர்கள் அழகான கையெழுத்து மற்றும் தெளிவாக எழுத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இருந்தபோதிலும் குழந்தைகள் எழுதிய வாக்கியங்கள் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். எழுத்தின் உண்மையான வெற்றி அது வெளிப்படுத்தும்.

வாசிப்பதற்கு எளிதாக இருப்பதன் காரணமே அழகான கையெழுத்தாகும். எழுத்தின் அழகு அவனுடைய மொழி அறிதல் திறனுக்கு குறியீடு ஆகாது. ஒரு மாணவனுடைய கையெழுத்து அழகாக இருப்பின் அவனுடைய மொழி;த்திறன் சிறப்பானதென்று அர்த்தம் கிடையாது. அதே போல் ஒரு மாணவனுடைய கையெழுத்து மோசமாக இருப்பின் அவனுடைய மொழித்திறன் மோசமானதென்று அர்த்தம் கிடையாது. ஆசிரியர்கள் ஒரே மாதிரியான கையெழுத்துக்களை மாணவர்களிடம் எதிர்பார்க்கக் கூடாது. மாணவர்களின் தனித்திறனுக்கேற்றவாறு தனித்துவம் வாய்ந்த கையெழுத்துகளை வளர்த்துக் கொள்கின்றனர். ஆகவே எழுத்துக்களின் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை விட அதனுடைய வடிவங்களுக்குக் கிடையாது. இருந்தபோதிலும் ஆசிரியர்கள், குழந்தைகள் தெளிவான கையெழுத்துகளை உருவாக்குவதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

குறிப்புகள்

## 6.4.2. நல்ல கையெழுத்து உருவாக்க குழந்தைகளுக்கு உதவுதல்

உடலியக்கத்திறன் பார்வை› எழுதுகோல் படித்தல், கையின் எழுது நிலை போன்ற அடிப்படைத்திறன்களை வளர்ப்பதன் மூலம் குழந்தைகளில் அழகான கையெழுத்தை உருவாக்கலாம். குறிப்பிட்ட எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுக்கும் போது ஆசிரியர்கள் இனிமையான அணுகுமுறையையும் மேற்கொள்ளலாம். குறிப்பாக S என்ற ஆங்கில எழுத்து பாம்பு போல் தோன்றுகிறது என்று Q என்ற ஆங்கில எழுத்து பலூன் போல் உள்ளது. விளையாட்டுகள் மூலமும் அவருடைய கையெழுத்திலுள்ள குறைபாடுகளை நீக்கலாம். ஊதாரணமாக எழுத்துகளின் அளவை கட்டுப்படுத்துவதற்கு வட்டம் வரைந்து அதற்குள் பல எழுத்துகளை நிரம்பும்படி கூறலாம். குழந்தைகளுக்கு அவர்களுக்கு புரியும் அர்த்தமுள்ள பாடப்பகுதிகளை அறிமுகப்படுத்தலாம். பாடப்பொருளின் அடிப்படையில் பயிற்சிகளை உருவாக்கி எழுத்துகளுக்கும்› வார்த்தைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கலாம். உதாரணமாக குழந்தைகளுக்கு நேர்கோட்டு எழுத்துகளை மற்ற எழுத்துகளிலிருந்து வேறுபடுத்தச் சொல்லலாம்.

## 6.4.3. கையெழுத்தும் ஆளுமையும்

சில ஆசிரியர்கள் ஒழுங்கற்ற கையெழுத்துடையவர் ஆளுமை குறைபவர்களாக கருதுகிறார்கள். ஆகவே குழந்தைகளை மீண்டும் மீண்டும் எழுதுதல் பயிற்சிக்கு உள்ளாக்குகிறார்கள். ஆசிரியர்கள் மீண்டும் மீண்டும் எழுதப் பயிற்சி கொடுப்பது மாணவர்களிடையே வெறுப்பை ஏற்படுத்தி பயனற்றதாக மாறக்கூடும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கையெழுத்தை மேம்படுத்துவது ஆளுமையை மேம்படுத்தும் என்று கூறமுடியாது. ஏனென்றால் கையெழுத்து ஆளுமையில் தாக்கத்தை ஏற்படுத்துவது கிடையாது. கையெழுத்தை மேம்படுத்துவதற்கான முயற்சியை எழுதுவதில் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் முடியலாம். ஆகவே கையெழுத்து அர்த்தமுள்ளதாக இருப்பதிலே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

## 6.4.4. கையெழுத்து எழுத்து பிறழ்வு (டிஸ்லெக்சியா) மற்றும் உடல் குறைபாடுக்கான ஓர் அறிகுறி

எழுத்துப் பிறழ்வு படிப்பு திறனின் குறைபாட்டைக் குறிக்கிறது. அனைவருக்கும் எப்பொழுதாவது இந்த எழுத்து பிறழ் குறைபாடு ஏற்படுகிறது. படிக்கும்போது அனைவரும் தவறு செய்வதுண்டு. ஆனால் சில சதவீத குழந்தைகள் படிக்கும் பொழுது எழுத்து பிறழ் குறைபாட்டிற்கு ஆளாகின்றது.

குறிப்புகள்

எந்த குழந்தைகளுக்கு எழுதும்போது தீவிரக் குறைபாடு உள்ளதோ அவர்கள் எழுத்துப் பிறழ்வு குறைபாட்டால் (டிஸ்லெக்சியா) பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எழுத்துப் பிறழ்வுடைய மாணவர்கள் ஒரு படத்தை முழுமையாக பார்க்க முடியும். அதனுடைய உட்கூறுகளை பார்க்கத் தவறி விடுவார்கள். அவர்களுக்கு பரிணாமத்தூண்டல் இருப்பது கிடையாது. இது எழுதுவதில் பிரச்சனையை உருவாக்குகிறது. எழுத்துப் பிறழ்வு உள்ள குழந்தைகள் எழுதுவது தெளிவற்றும், ஒழுங்கற்றும் காணப்படுகிறது. ஒரே எழுத்தை மீண்டும் மீண்டும் எழுதும்போதும் கூட மாற்றி எழுதுவார்கள். இவர்களுக்கு பார்த்து எழுதுவதிலும் பிரச்சனைகள் உள்ளது. இந்த குழந்தைகள் எழுதும் போது அவர்களுடைய எழுதும் நிலையும் ஒழுங்கற்று காணப்படும். எழுத்துப் பிறழ்வு குறைபாடு ஒழுங்கற்ற எழுதும் திறனோடு தொடர்புடையது. இருந்தபோதிலும் ஒழுங்கற்ற எழுத்து பிறழ் இருப்பினும் அதை எழுத்து பிறழ்வு குறைபாடு என்று ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே இப்படிப்பட்ட குறைபாடுடைய குழந்தைகளுக்கு தனிக்கவனம் செலுத்தி சிறப்பு பயிற்சிகள் கொடுக்க வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 3**

1. எழுத்து பிறழ்வு குறைபாடுடைய ஒருவன்

   (அ) எப்பொழுதும் முழுமையான படத்தை பார்க்கிறான்

   (ஆ) படத்தை பார்க்க முடிவதில்லை

   (இ) படத்தினுடைய உட்கூறுகளை பார்க்கிறான்

   (ஈ) படம் வரைய முடியாது

2. எழுதுகோலை பிடிப்பதில் கையின் எழுது நிலையின் தாக்கத்தை ஆராய்க.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. புதுமையான வழிமுறைகளை பயன்படுத்தி எழுதுதிறனை ஊக்குவித்தல், எழுதுதலி;ல் உள்ள குறைபாடுகளை களைய பல பயிற்சிகள் அளித்தல்.

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

4. உனது வகுப்பில் ஒழுங்கற்ற முறையிலும் படிக்க முடியாத நிலையிலும் எழுதும் குழந்தை உள்ளது. நீ என்ன செய்வாய்?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

## 6.5. நல்ல கையெழுத்தின் பண்புகள்

எழுதும் மொழித்திறனானது எப்பொழுதும் இலக்கணம் நடையுடன் இருக்க வேண்டும். நாம் பேசும் போது கேட்பவர் தவறாக புரிந்து கொண்டால் அதை தெளிவுபடுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. ஆனால் எழுதி விட்டால் அந்த வாய்ப்பு இருப்பதில்லை இவ்வாறு பேச்சுத்திறன் மற்றும் எழுத்துத்திறன் இடையிலுள்ள வேறுபாடு குழந்தையின் எழுத்துத்திறன் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஏனென்றால் பேச்சுத்திறன் எழுத்துத்திறனுக்கே அடிப்படையாக அமைகிறது. எழுத்துத்திறனின் குறிப்பிட்ட உட்கூறுகள் பேச்சுத்திறனின் உட்கூறுகளாக அமைவதில்லை. உதாரணத்திற்கு நிறுத்தற்குறியீடுகள் எழுத்துக்களின் ஒழுங்கமைவு ஆகியவை ஆகும். ஆகவே குழந்தைகளை அவர்கள் விருப்பப்படி எழுத அனுமதிப்பது பயனுள்ளதாகும். மொழித்திறன்களில் எழுதும் திறன் தான் மிகவும் சவாலானது.

இதனை முழுமையடையச் செய்வதற்கு வார்த்தை வளம், இலக்கணம், வாக்கிய அமைப்பு ஆகியவை தெரிந்திருக்க வேண்டும். குழந்தைகள் பத்தியாக எழுதும் அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளனர். வெவ்வேறு வாக்கியங்களுக்கிடையே தொடர்பு எற்படுத்தத் தெரிந்து கொள்கின்றனர். இவை அனைத்தும் எழுத்திற்கு அர்த்தம் கொடுப்பதில் உதவுகின்றன. மொழியில் அர்த்தம் ஒரு இன்றியமையாதாக கூறாக அமைகின்றது. ஆகவே எழுதும்போது அர்த்தமுள்ளதாக தெளிவாக எழுத வேண்டும். எழுதும் செயலானது ஒழுங்கற்ற கருத்துகளுக்கு ஓர் அர்த்தம் கொடுக்கும் ஒழுங்கான செயலாகும். எழுதுதல், எழுதுதலின் நோக்கம். அர்த்தமுள்ள வெளிப்பாடு மற்றும் தொடர்பாகும். இந்த நோக்கங்கள் வகுப்பறைச் செயல்பாடுகளில் விடுபட்டு வருகிறது.

### 6.5.1. இலக்கண பிழையில்லா மொழி

ஆசிரியர்கள் மாணவர்களின் எழுத்துக்களை மதிப்பீடு செய்யும் போது எழுத்து ஒழுங்கமைவு, இலக்கண பிழைகளை பார்க்கிறார்கள். பேசும்போதும்

குறிப்புகள்

எழுதும்போதும் இலக்கண பிழை, எழுத்துப் பிழை நிகழ்பவை இயற்கை என்பதை ஆசிரியர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். தொடக்கத்திலிருந்து யாரும் பிழையின்றி பேசவோ, எழுதவோ முடியாது. சிக்கலான வாக்கியங்களில் பிழைகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. வெவ்வேறு குழந்தைகள் வெவ்வேறு விதமாக எழுத வாய்ப்புகள் உள்ளன. ஏனென்றால் சில மொழிகளில் ஓர் எழுத்துக்கு பல ஒலிகள் இருப்பதுண்டு. மேலும் மொழியில் வடமொழி வேறுபாடுகளும் உள்ளன. ஒரே வார்த்தையை வேறுபட்ட சமூக சூழலில் வாழும் குழந்தைகள் வெவ்வேறு விதமாக பயன்படுத்த வாய்ப்புள்ளது.

உதாரணமாக இந்தி வார்த்தை ஷக் சில இடங்களில் சக் என்று உச்சரிக்கப்படுகிறது. இதை ஒரு பிழையாக எடுத்துக் கொள்வதை விட ஓர் இயற்கை நிகழ்வாக எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தி இலக்கணத்தில் இவ்வாறு பல உதாரணங்கள் உள்ளன. பல சமூகங்கள் பாலின வேறுபாடின்றி ஒரே வினைச்சொல்லை பயன்படுத்துகிறது. இதை மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டியிருந்தால் குழந்தைகள் சோர்வடைந்து விடுகின்றன. சில சமயங்களில் பள்ளியில் இருந்து நிறுத்தவும் வாய்ப்பு உள்ளது. குழந்தைகளுக்கு சரியான எழுத்தமைவு இலக்கணம் ஆகியவைகளை சொல்லிக் கொடுப்பதற்கு சவால் நிறைந்த அதே நேரத்தில் கவர்ச்சிகரமான பாடப்பொருள்கள் கொடுக்கப்படவேண்டும். தரமான சொல் அமைவு, இலக்கியம் ஆகிய இரண்டும் அர்த்தமுள்ளது எனக் கருத வேண்டாம். ஆனால் அர்த்தமுள்ளதாக இருந்தும் மனநிறைவை கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

## 6.5.2. கற்போரை மனதில் இருத்தல்

எழுதுவதெல்லாம் படிப்பதற்காக எழுதப்படுகின்றன. யாரும் படிக்கவில்லையென்றாலும் நாமாவது படிக்க வேண்டும். யாருக்காக எழுத நினைக்கிறோமோ அவர்களை சார்ந்து எழுதுவதில் மாற்றத்தைக் கொண்டுவருகிறோம். எழுதும் விதம், வார்த்தை, தேர்வு, இலக்கணம் ஆகிய அனைத்தும் படிப்போரை மனதில் வைத்துக் கொண்டு செய்யப்படுகிறது. இதை மனதில் வைத்துக் கொண்டு வகுப்பறையிலும் மாணவர்களுக்கேற்றவாறு கற்றல் செயல்பாடுகளை அமைத்துக் கொள்கிறோம். மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் வினாக்கள் வடிவமைக்கப்பட்டு அளிக்கப்படுகிறது. இவ்வாறு படிப்போரை மனதில் வைத்துக் கொண்டு மாணவர்கள் எழுதுமாறு ஊக்கப்படுத்தப்படுகிறது. உதாரணமாக நீங்கள் பலவிதமான கடிதங்கள் எழுதலாம். அவை உங்கள் படிப்பைப் பற்றியதாக இருக்கலாம். உங்களுடைய நண்பர்களைப் பற்றியதாக இருக்கலாம். உங்களது பெற்றோர்களைப் பற்றியதாக இருக்கலாம்.

குறிப்புகள்

### தெளிவும் சுருக்கமும்

படிப்பவர்களிடையே எந்த வித குழப்பத்தையும் ஏற்படுத்தாமல் தெளிவாகவும், சுருக்கமாகவும் எழுத வேண்டும். தெளிவாகவும், சுருக்கமாகவும் இருப்பதற்கு மாணவர்களுக்கு படிப்பவரின் அனுபவமும் தேவை எழுதுபவரின் அனுபவமும் தேவை. படித்தல் மாணவர்களுக்கு எழுத்தாளர்கள் கையாண்ட பல உத்திகள் தெரியவரும். தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதுவதற்கு தரமான திட்டமிடுதல் வேண்டும். எழுதப் போகும் கருத்துகள் எளிமையாக இருக்க வேண்டும். கருத்துக்களுக்கு இடையே உள்ள உறவு தொடர்புடையதாக இருக்க வேண்டும். மாணவர்கள் எழுதும்போது கருத்துக்களை ஆராய்ந்து மாற்றியமைக்கும் வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். மாணவர்கள் எழுதியது மீளாய்வு செய்யவும் மேம்படுத்தவும் வாய்ப்புகள் கொடுக்கப்படும்போது அவர்கள் தரமானவர்களாக உருவாக்கப்படுகின்றனர். ஆசிரியர்கள் மாணவர்கள் எழுதுவதில் திருத்தம் செய்வதற்காக சிவப்பு குறியீடு இடுவது மாணவர்களை சோர்வடையச் செய்கிறது.

## 6.5.3. எளிமை மற்றும் கவிநய மொழி

கவிநய மொழியானது எழுதுவதை தரமுள்ளதாகவும் சிறப்பு மிக்கதாகவும் உருவாக்குவதாக கருதப்படுகிறது. மேலும் கடினமான வார்த்தைகளால் அமைக்கப்படும் வாக்கியங்கள் தரம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. ஆனால் இவ்வாறு எழுதப்படுபவை சில சமயங்களில் கருத்து தெளிவில்லாமலும்› குழப்பத்தை ஏற்படுத்தி எழுதுதலின் நோக்கத்திலிருந்து திசைமாறிய வாய்ப்புகள் உள்ளன. படிப்பவர்களுக்கு புரிந்து கொள்வதற்கு எது எளிமையாக உள்ளதோ அது தரமான எழுத்துக்களாக கருதப்படுகிறது. ஆகவே மாணவர்கள் எளிமையாகவும் கவிநயத்துடன் எழுதுவதற்கு கற்றுக் கொடுக்கப்படவேண்டும்.

எழுதுவதின் முக்கியப் பண்பானது எழுதுபவர் தன்னுடைய கருத்துகளை முழுமையாக வெளிப்படுத்துவதின்றி மற்றவர்களை கவர்வதற்காக அல்ல. இதற்காக எளிமையாக எழுதுதல் தரமானது அன்று கருதிவிட முடியாது. மாணவர்கள் வளர்ச்சியடைய அவர்கள் நிலைக்கேற்றவாறு புதுப்புது வார்த்தைகளையும் பயன்படுத்த வேண்டும். இந்த வார்த்தைகள் கொடுக்கப்பட்டுள்ள பாடப்பொருளுடன் பொருத்தப்பாடுள்ளதாக இருக்க வேண்டும். பல வகையான வார்த்தைகளை பயன்படுத்தி சுதந்திரமாக குழந்தைகள் தங்களது கருத்துகளை வெளிப்படுத்த வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். இருந்தபோதிலும் தரமான கருத்து பரிமாற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். மாணவர்கள் தாங்கள் எழுதியதை

குறிப்புகள்

படிப்பவர்களுக்கு போதுமான மரியாதை கொடுக்க வேண்டும். மாணவர்களுக்கு தெளிவான தரமான மற்றும் சுருக்கமான எழுத்துகளுக்கான உதாரணங்கள் கொடுக்கப்பட வேண்டும். எளிமையாக எழுதுவது கவிநயத்தோடு எழுதுவதை விட சிறந்ததாக கருதப்படவேண்டும். இதற்கு கீழ் வரும் இரண்டு வாக்கியங்களை ஒப்பிட்டு பார்க்கலாம்.

(அ) மிகவும் மரியாதைக்குரிய இந்நிறுவனத்தின் சிறந்த அழகான திறமை வாய்ந்த எங்கள் பாசமிகு முதல்வர் அவர்களே தயவுகூர்ந்து எனது எளிய வேண்டுதலை ஏற்றுக்கொண்டு இரண்டு நாட்கள் விடுப்புத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) இரண்டு நாள் விடுப்புத் தரும்படிக் கேட்டுக் கொள்கிறேன்

இந்த இரண்டு வாக்கியங்களில் 'ஆ' மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் உள்ளது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 4**

1. எழுதுவதின் நோக்கம் என்ன?

   (அ) கவிநய மொழியைப் பயன்படுத்துதல்

   (ஆ) இலக்கண பிழையில்லா மொழி

   (இ) சரியாக எழுதுவது

   (ஈ) அர்த்தமுள்ள பரிமாற்றம்

2. தரமான எழுத்துக்களின் பண்புகள் யாவை?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. அர்த்தமுள்ள எழுத்துகள், இலக்கணப் பிழையில்லா எழுத்துகள் இதில் எது சிறந்தது காரணம் கூறு?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

4. எழுதக் கற்கும் போது குழந்தைகளுக்கு சொல்லமைப்பு இலக்கணம் ஆகியவைகளில் ஏன் தவறு ஏற்படுகிறது?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

5. குழந்தைகளின் தரமாக எழுதும் திறனை வளர்ப்பதற்கான ஒரு வகுப்பறைச் செயல்பாட்டைக் கூறு?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

6. மாணவர்களின் எழுதுத் திறனை மேம்படுத்துவதில் மீளாய்வு செய்தல், மீண்டும் எழுதுதல் ஆகியவைகளின் பங்கு என்ன?

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

## 6.6. தொடக்க நிலை வகுப்புகளில் எழுதுதல் திறனை வளர்த்தல்

தொடக்க நிலையில் மாணவர்களுடைய எழுது திறன் வளர்ச்சியானது கேட்டல், பேசுதல், படித்தல் ஆகிய மூன்று மொழித்திறன்களையும் சார்ந்து அமைந்துள்ளது. எழுதுவது அர்த்தமுள்ளதாக இருக்கும்போது மாணவர்கள் கருத்துச்செறிவுடன் எழுதக் கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் அதை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறார்கள். எழுதுவதற்கு கற்கும் வாய்ப்பை வகுப்பறைச் செயல்பாடுகள், தனிச் செயல்பாடுகள் அதிகமாக வழங்கப்படவேண்டும்.

(i) படம் உருவாக்குதல் இந்த செயல்பாட்டில் படங்கள் பொருள், பல நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டும் படங்களாகவும் இருக்கலாம். கொடுக்கப்பட்ட படங்களை விவரித்து எழுதச் சொல்லுதல் இந்த எழுத்துக்கள் கட்டுரைகளாக இருக்கலாம் கவிதைகளாக இருக்கலாம், கதைகளாக இருக்கலாம். மாணவர்களை படங்களைப் பார்த்து கதை எழுதச் சொல்லலாம். வெற்றிடங்களை நிரப்பச் சொல்லலாம் ஆகிய செயல்பாடுகளை கொடுக்கலாம்.

குறிப்புகள்

(ii) கொடுக்கப்பட்ட குறிப்புகளில் இருந்து கதை எழுதச் சொல்லலாம். வார்த்தை தொகுப்பிலிருந்து கதை எழுதச் சொல்லலாம். கதை சுருக்கத்திலிருந்து விரிவாக்கச் சொல்லலாம்.

(iii) மாணவர்கள் தங்களுக்குப் பிடித்தமான பொருளோ› இடமோ நபரைப் பற்றியோ எழுதலாம். இந்தச் செயல்பாடுகள் மூலம் மாணவர்களின் எழுதுதல் திறன் வளர்வதோடு கற்றலும் மேம்படுகிறது.

(iv) மாணவர்களுக்கு கதையின் தொடக்கத்தைக் கூறிவிட்டு அதை முழுமையாக எழுதச் செய்யலாம்.

(v) ஆசிரியர் வார்த்தைகளை சொல்லச் சொல்ல மாணவர்களை அதைக் கேட்டு எழுதச் சொல்லலாம்

(vi) வார்த்தை ஏணி என்ற செயல்பாட்டை கொடுக்கலாம். ஒரு வார்த்தை அளித்து அதன் கடைசி எழுத்திலிருந்து அடுத்த வார்த்தை உருவாக்கச் செய்தல்.

(vii) மாணவர்களுக்கு பிடித்தமான தலைப்பில் விவாதம் செய்யச் சொல்லி அதைப்பற்றி எழுதச்செய்யலாம்.

(viii) அடுக்குச் சொற்றொடர்களை எழுதச் செய்யலாம்.

மாணவர்களுக்கு எழுதக்கற்றுக் கொடுக்கும் போது அவர்களுடைய கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். மாணவர்களை கட்டுரைகளை மனப்பாடம் செய்து எழுதச்செய்வது தவறாகும். இது அவருடைய கற்பனை வளத்தைக் கெடுத்துவிடும். சுயமாக எழுதும் வார்த்தையை அழித்துவிடும். மாணவர்கள் சுயமாக சிந்தித்து கற்பனை வளத்தை பயன்படுத்தி எழுதும் வாய்ப்பைக் கொடுக்க வேண்டும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 5**

1. எழுதக் கற்றுக்கொள்ளும் போது என்ன செய்ய வேண்டும்?

   (அ) மாணவர்கள் கட்டுரைகளை மனப்பாடம் செய்து எழுத வேண்டும்

   (ஆ) மாணவர்களை அனைத்து எழுத்துகளையும் எழுதச் செய்தல்

   (இ) மாணவர்கள் அவர்களுடைய கருத்துகளை எழுதுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும்

   (ஈ) மாணவர்கள் ஒரே வார்த்தையை மீண்டும் மீண்டும் எழுத வேண்டும்.



குறிப்புகள்

2. அடுக்கு சொற்றொடர்கள் மாணவர்கள் எழுதுவதற்கு எவ்வாறு உதவுகிறது?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

3. எழுதக் கற்றுக் கொடுப்பதற்கு சில வகுப்பறைச் செயல்பாடுகளை எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

4. கதைகள் மூலம் எவ்வாறு எழுதக் கற்றுக்கொடுக்கலாம்?

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

## 6.7. உயர்நிலை படைப்புகள்

பத்தி எழுதுதல், கடிதம், கட்டுரை, கதை, கவிதை போன்றவைகள் உயர்நிலை படைப்புகளாகும். பள்ளிகளில் இந்த படைப்புகள் மூலம் மாணவர்களுடைய படைப்பாற்றல் கருத்து வெளிப்படுத்துதல், கருத்து பரிமாற்றத்திறன் ஆகியவை வளர்க்கப்படுகின்றன. இப்படைப்புகள் மாணவர்களிடம் ஒரே கருத்தை உருவாக்கி வெளிப்படுத்தும் திறனை வளர்க்கிறது. இந்த பயிற்சியானது மாணவர்களிடையே சிந்தனையைக் கோர்வையாக அர்த்தத்தோடு வெளிப்படுத்தும் திறனை வளர்க்கிறது. இது கட்டுரை எழுதுவதற்கு அடிப்படையாக அமைகிறது. மாணவர்கள் அவர்களுடைய வாழ்க்கைச் சூழலோடு சார்ந்துள்ளவைகளைப் பற்றி எழுத ஊக்குவிக்க வேண்டும். இந்தக் கட்டுரைகள் மாணவர்களுடைய வயதிற்கேற்றவாறு அளவில் சிறிதாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும்.

**கட்டுரை எழுதுதல்:**

ஒரு கட்டுரை என்பது மாணவர்கள் தங்களுடைய கருத்துக்களை ஒரு சிந்தனைக் கோர்வையின் கீழ் கொண்டு வந்து எழுதுவதாகும். பொதுவாகக் கட்டுரைகள் இரண்டு வகைப்படும். அவை, சிந்தனையை சார்ந்தது

மற்றொன்று உணர்வைச் சார்ந்தது. ஒரு கட்டுரை பல பாகங்களைக் கொண்டது. முன்னுரை, பொருள், முடிவுரை இந்த மூன்று கூறுகளும் கட்டுரையின் சிந்தனை தொடர்பை வெளிப்படுத்துகிறது. அவர்களுடைய கருத்துகள் தலைப்புக்கு உகந்ததாக இருக்க வேண்டும். மேலும் ஒன்றோடொன்று தொடர்புடையதாக இருக்க வேண்டும். படைப்பாளி கட்டுரையை தெளிவாக எழுதுதல் வேண்டும். கட்டுரைகள் ஆழ்ந்த கருத்துகளை வெளிப்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் படைப்பின் தரத்தை மனதில் நிறுத்திக்கொண்டு பல சமயங்களில் அவர்கள் சொல்ல மாணவர்கள் எழுதக் கேட்கிறார்கள். மாணவர்கள் அதை மனப்பாடம் செய்து எழுதுகிறார்கள். இப்படிப்பட்ட பயிற்சிகள் மாணவர்களுடைய படைப் பாற்றல் திறனை அடியோடு அழித்துவிடுகிறது. ஆகவே மாணவர்களுக்கு அவர்களுடைய கருத்துகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்தும் வாய்ப்புகளை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

### கடிதம் எழுதுதல்

பொதுவாக கடிதங்கள் தொலைவில் உள்ளவர்களுடன் தகவல் தொடர்புக்காக எழுதப்படுகிறது. கட்டுரைகள் போன்றல்லாமல் குறிப்பிட்ட தகவலை பரிமாறுவதற்காக எழுதப்படுகிறது. ஆகவே கடிதங்களில் கட்டுரையை போல் கருத்து விரிவாக்கம் தேவை கிடையாது. இருந்த போதிலும் தகவலை பரிமாறுவதற்கான சிறப்புத்திறன் தேவைப்படுகிறது. கடிதங்கள் எழுதுபவர், பெறுபவர்க்கு இடையேயுள்ள வரவை பொறுத்து வேறுபடுகிறது. எழுதுபவர் கடிதம் எழுதும் போது பெற்றுக்கொள்பவரை மனதில் வைத்துக் கொண்டு கடிதப் பொருளை எழுத வேண்டும்.

### கதை எழுதுதல்

கதை எழுதுவது மாணவர்களிடையே சிந்திக்கும் திறனை வளர்க்கிறது. இந்த செயல்பாடானது எல்லா நிலையிலுள்ள மாணவர்களுக்கு அளிக்கலாம். இச்செயல்பாட்டை தொடக்க நிலையிலுள்ள பள்ளி மாணவர்களுக்கு அளிப்பதால் அவர்களுடைய கற்பனை வளமும், சிந்திக்கும் திறனும் வளர வாய்ப்புள்ளது. இருப்பினும் மாணவர்கள் வளர வளர அவர்கள் உயர்நிலைத் திறன்களில் வளர்ச்சியடையும் படி எதிர்பார்க்கப்படுகிறது. சிக்கல்களுக்கு தீர்வுகாணும்படி இயற்கை அழகை பாராட்டுதல் போன்ற திறன்கள் வளர வேண்டும். இவ்வகை உயர்திறன்கள் பல வகையான இலக்கிய படைப்புகளால் மேம்படுத்தப்படுகிறது. மாணவர்கள் உயர்நிலை வகுப்புகளை அடையும்போது அவர்களிடமிருந்து கவிதைகள், கதைகள், நாடகங்கள், கட்டுரைகள் போன்ற படைப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இவ்வாறு கதை எழுதும் பயிற்சி இலக்கிய படைப்புகளில் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டி ஊக்குவிக்கிறது. கதை எழுதுவதோடு மட்டுமல்லாமல் கதையின் முடிவுகளை மாற்றியெழுதும் திறனை வளர்த்துக் கொள்ளலாம்.

குறிப்புகள்

## கவிதைகள் எழுதுதல்

தொடக்க நிலையிலுள்ள குழந்தைகள் எளிமையான கவிதைகளையே தெரிந்திருப்பர். அவர்களுக்கு அடுக்குச் சொற்றொடர் கவிதைகள் விருப்பமானவை. இவை அவர்களிடையே மகிழ்ச்சியையும், ஆர்வத்தையும் தூண்டுகிறது. படிப்பதற்கும் எளிமையாக உள்ளது. இந்த அடுக்கு சொற்றொடர் சிறிய கவிதை எழுதுவதற்கான ஆர்வத்தைத் தூண்டுகிறது. ஆகவே குழந்தைகளுக்கு சிறிய சிறிய கவிதைகளை எழுதப் பயிற்சி அளிக்கலாம். குழந்தைகள் தனித்தனியாகவோ குழுக்களாகவோ சேர்ந்து கவிதைகள் எழுதலாம். இது ஒரு மகிழ்ச்சிகரமான செயல்பாடாக விளங்கும்.

உயர்நிலை வகுப்புகளில் கவிதை எழுதும் செயலானது கடினமான ஒன்றாக அமைந்து விடுகிறது. ஏனென்றால் உயர்நிலையில் கவிதைகள் ஆழ்ந்த› வளமான கருத்துக்களை கொண்டதாக உள்ளது. ககவிதை எழுதும் செயல்பாடு மாணவர்களிடையே இயற்கை அழகை ரசிக்கவும் நேசிக்கும் திறனையும் வளர்க்கிறது.

**முன்னேற்றத்தை சோதித்து அறிதல் - 6**

1. தொடக்க நிலை மாணவர்கள் அறிந்த கவிதை வகைகள் யாவை?

   (அ) கடினமான சொற்களால் எழுதப்பட்டவை

   (ஆ) சிந்தனையைத் தூண்டுபவை

   (இ) அடுக்குச் சொற்றொடர் கவிதை

   (ஈ) சிறிய கவிதைகள்

2. கடிதம் எழுதுதல் கட்டுரை எழுதுதலிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

3. குழந்தைகளின் ஆர்வம் என்ற தலைப்பில் ஒரு பத்தி கட்டுரை எழுதுக?

   ..........................................................................................................

   ..........................................................................................................

   ..........................................................................................................

குறிப்புகள்

4. பொதுவாக ஆசிரியர்கள் கட்டுரைகள் மற்றும் கடிதங்கள் எழுதிக் கொடுத்து மனப்பாடம் செய்யச் சொல்கிறார்கள். இது சரியான செயல்பாடா காரணம் கூறுக?

.....................................................................................................

.....................................................................................................

.....................................................................................................

## 6.8. தொகுப்புரை

எழுதுதல் என்பது ஒரு மொழித்திறனாகும். எழுதுதல் சமதளத்தில் உருவாக்கப்படும் குறியீடுகளும், எழுத்துக்களும் ஆகும். இவை படிப்பவர்களால் புரிந்துக் கொள்ளப்படுகிறது. மாணவர்களுக்கு எழுதக் கற்றுக் கொடுக்கும்போது அவர்கள் ஏற்கனவே முன் எழுதுதிறன் பெற்றிருப்பதை உறுதி செய்தல். அவை உடலியக்கத்திறன் › எழுதுகை திறன், உடல் வளர்ச்சி, மொழி, பேசும் திறன் ஆகியவை ஆகும். குழந்தைகள் எழுது பொருளைப் பயன்படுத்துவதன் மூலம் தாங்கள் எழுதுவதற்கான தயார் நிலையை வெளிப்படுத்துகின்றன.

எழுதத் துவங்கும் குழந்தைக்கு பொருள் புரியும்படி எழுதுவது முக்கியமாகும். குழந்தைகள் எழுதத்தொடங்கும் போது தவறுகள் செய்கின்றன. இதற்குப் பேச்சுத்திறனுக்கும், எழுத்துத் திறனுக்கும் உள்ள வித்தியாசம் காரணமாகும் எழுதும் திறனை வளர்ப்பது கேட்டல் திறன், பேச்சுத்திறன், படிப்புத்திறன் ஆசியவைகளை சார்ந்திருப்பதால் நான்கு திறன்களும் ஒன்றோடொன்று சார்ந்துள்ளதாக அமைய வேண்டும்.

ஒரு மாணவருடைய கையெழுத்து அவனுடைய ஆளுமையை பற்றி எந்த தகவலும் அளிப்பது கிடையாது. ஒழுங்கற்ற கையெழுத்துடையவர் ஒழுங்கற்ற ஆளுமை உடையவர் என்று அர்த்தம் கிடையாது. குழந்தைகளுக்கு பல வகையான பயிற்சிகள் மூலம் அவர்களுடைய கையெழுத்துக்களை மேம்படுத்தலாம். தெளிவாக எழுதுவதற்கும், சுருக்கமாக எழுதுவதற்கும், எளிமையாக எழுதுவதற்கும் முக்கியதுவம் கொடுக்க வேண்டும். எழுத்துப் படைப்புகள் பேச்சுகளிலிருந்து வேறுபடுவதால் மாணவர்களை பல விதமான படைப்புகள் மூலம் அவர்களுடைய படைப்பாற்றலை மேம்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறே சொல்லமைவு மற்றும் இலக்கணம் போன்றவற்றிலும் சிறந்து விளங்கலாம். குழந்தைகள் வளர வளர அவர்களுடைய படைப்பாற்றல் திறனும் வளர்கிறது. அவர்களுடைய வயதிற்கேற்றவாறு கட்டுரை எழுதுதல், கடிதம் எழுதுதல் › கவிதை எழுதுதல்,

கதை எழுதுதல் போன்ற செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

## 6.9. பார்வை நூல்களும் மேற்கோள் குறிப்புகளும்


- Trask.R.L. (1995) Language:the Basics London Routledge
- Kroll, Barbara (2003) Exploring the Dynamics of Second Language writing London:Cambridge University Press
- Yule, George (1985) The study of Language London: Cambridge University Press.


## 6.10. பயிற்சிகள்

1. எழுதுவதற்கு ஏன் உடலியக்கத்திறனை பெற்றிருப்பது அவசியம்?
2. பள்ளிக்கு வருமுன் எழுதுவதற்கான தனித்திறனை குழந்தை பெற்றிருக்கிறது. உன் அருகிலுள்ள நான்கு ஐந்து வயதுடைய குழந்தையை ஆய்வு செய்து பார்த்துக் கொள்ளவும்
3. பேச்சு வழக்கு மொழியானது வேகமாக மாறுகிறது. எழுத்து வழக்கிலுள்ள மொழியானது மெதுவாக மாறுகி;றது. ஊதாரணத் தோடு விளக்குக.
4. எழுத்துக்களில் எளிமை, தெளிவு, சுருக்கம், ஆகியவை எவ்வளவு முக்கியமானவை விளக்குக.
5. பேச்சு வழக்கு மொழி, எழுத்து வழக்கு மொழிகளுக்கிடையேயுள்ள வேறுபாட்டை ஆய்வு செய்க.
6. எழுத்து பிறழ்வு குறைபாடுடைய குழந்தைகள் என்னென்ன தடைகளை எதிர்கொள்கிறார்கள்.
7. மொழிக்கற்றல் கதை எழுதுதல், கவிதை எழுதுதல் ஆகியவைகளின் பங்கு என்ன?

## செயல்பாடு

- குழந்தைகளிடையே பண்பு சார்திறன்களை வளர்க்கக் கூடிய செயல்பாடுகளை ஆராய்க.
- வகுப்பறையில் குழந்தைகள் சக மாணவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு என்னென்ன செயல்பாடுகள் அளிக்கலாம். என ஆராய்க. எந்த விதமான கருத்துக்களை அளித்து இதனை மேற்கொள்ளலாம்.